பெண்மை காம் மின் இதழ்

புதுமையைத் தேடி...

2ம் ஆண்டின் முதல் இதழ்

Non Veg food ideas for kids

Dinner Recipes

பண்டிகை சிறப்பிதழ்

பக்ரீத் பண்டிகை

தீபாவளிப் பண்டிகை

கேதார கௌரீ வ்ரதம்

புதுமையைத் தேடி...

அன்பு பெண்மை தோழமைகளுக்கு வணக்கம்,

மலர் 2
இதழ் 1

எம்மதமும் சம்மதமாய் வாழும் நம் இந்தியத் திருநாட்டில், பண்டிகை காலங்கள் தொடங்கி விட்டது. தசரா, தீபாவளி, பக்ரித், கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் திருநாள் என இன்னும் சில மாதங்களுக்குத் தொடர்ந்து பண்டிகைக் கொண்டாட்டங்கள் தான்.

பண்டிகை என்பது மனித குலத்தில் போற்றத்தக்க பண்பாடு. எளியோர் முதல் அரசாள்பவர் வரை அனைவருக்கும் பண்டிகைகள் பொதுவானது தான். ஆனால் ஒவ்வொருவரும் கொண்டாடுகிற விதம்தான் வித்தியாசப்படுகிறது. பண்டிகை போன்ற தருணங்கள் சந்தோஷத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதற்கு ஒரு அருமையான வாய்ப்பு.

"ஈதல் இசைபட வாழ்தல்", என்பது தொன்றுதொட்டு போற்றப்பட்டு வரும் நம் தமிழர் மரபு. ஏழைகளுக்குக் கொடுப்பது; அதனால் புகழ் பெருக வாழ்வது; அப்புகழ் அன்றி மனிதர்க்குப் பயன் வேறு ஒன்றும் இல்லை. ஆனால் நம் பண்பாட்டில் ஊறிய ஈகை இன்றைய அவசர உலகில் நம்மை விட்டு சிறிது சிறிதாக மறைந்து வருவது அதிர்ச்சி தரும் உண்மையே.

கொடுப்பதற்கு வரைமுறையென்று எதுவும் இல்லை, மனமுவந்து தம்மால் இயன்றதைக் கொடுக்கலாம். பசிக்கு உணவு, பணம், உடுத்த துணி, பொன் போன்ற நேரம், விலைமதிப்பற்ற அன்பு என்று கொடுப்பதற்கு எல்லையே இல்லை. இவையனைத்தையும் விட ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல், ஈகையில் மிகவும் புனிதமானது. இதையே பாரதி,

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்றார்.

நம் வாழ்வில் மட்டுமின்றி எளியவர் வாழ்விலும் மகிழ்ச்சியை புகுத்தும் விதமாக நம் முன்னோர்கள் கொண்டாடிய பண்டிகைகளை நாமும் அவ்விதமே கொண்டாடுவோம். யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற்றிட வழிவகை செய்திடுவோம்.

– உங்கள் தோழி இளவரசி

MAMMAS PAGE

06 Parenting tips

07 Parenting Guidelines

08 When to stop breast feeding for baby?

09 Non Veg food ideas for 1 year baby

1 மெய்ப்பொருள்

BEAUTY LOUNGE

Tips for glowing skin 12

அழகுக் குறிப்புகள் 12

FASHION TODAY

Trendy Necklace Collections 13

KIDS CORNER 14

CRAFTS GALLERY 15

HEALTH TIDBITS

16 Health benefits of Small Onion

16 பாட்டி வைத்தியம்

16 நடைப்பயிற்சி

SPIRITUAL PAGES

ஜெயம் தரும் விஜயதசமி 18

தீபாவளிப் பண்டிகை 19

லட்சுமி குபேர விரதம் 21

தியாகத் திருநாள் (பக்ரித் பண்டிகை) 23

கேதார கௌரி விரதம் 24

JOKES 26

MOVIE REVIEW 27

COOKING

Dinner Recipes 30

Penmai's Kitchen Queen 35

39 மனசே உனக்காக

41 இனி ஒரு விதி செய்வோம்

தமிழும்! அழகும்!!!

43 வள்ளுவன் பக்கம்

44 நீயா? நானா?

கதை பகுதி...

சிறுகதை 46

நித்தமும் உன் சிந்தனையே!!! 49

CONTESTS & REWARDS

59 September Month Contest Winners

59 October Month Contest

The Penmai's Team

Administrator (நிர்வாகி) - **E. Ilavarasi Johnson**

Super Moderator (தலைமை வழிகாட்டி) - **K. Parasakthi & Sumathi Srinivasan.**

Moderators (வழிகாட்டிகள்) - **Adhidhi, Angu Aparna@Aparna, JV_66@Jayanthy, Lali@Lalitha, Rudhraa, Silentsounds@Guna and Surya.**

Designing: Karthikeyan & Ilavarasi

For Advertisement Please contact, support@penmai.com or call us at 8344143220

Write us your feedback to admin@penmai.com

Shared contents.

Articles published here belongs to the users of Penmai, if you want to either comment or share your views, please click the article title, you will lead to the forums page, there you can pen down your views.

My அங்காடி

MY ANGADI .com

Traditional Tanjore Paintings Collection

Call us @ 83441-43220

Traditional Paintings @ www.MyAngadi.com

Free shipping across India.

International Shipping also Available.

Buy Now

Parenting Tips

...JV_66@Jayanthy

வீட்டில், எந்த வயதுக் குழந்தை இருந்தாலும், பெற்றோர் அவசியம் கடைபிடிக்க வேண்டிய ஒன்று இது.

நமக்குக் கோபம் வரும்போது, எந்த ஒரு பொருளையும் தூக்கி எறிவது, கதவை அடித்து சாத்துவது இதைப் போன்றோ அல்லது வேறு எந்த மோசமான முறையிலோ நமது கோபத்தை வெளிப்படுத்தினால், குழந்தைகள் (எந்த வயதினரும்) இதை அப்படியே பின்பற்றுவார்கள்.

அதற்குப் பதில், கோபம் வந்தால், யாருடனும் பேசாமல் இருந்து, நமது கோபத்தைக் காண்பித்தால், எல்லா விதத்திலும் நல்லது.

அனாவசிய வார்த்தைகளை வெளியே விட்டு, மற்றவர் மனதை புண்படுத்தாமல் இருக்கலாம். பண்டங்களை உடைக்காமல் இருக்கலாம். இதனால், குழந்தைகளும் இதே முறையைப் பின்பற்றுவார்கள்.

Parenting Guidelines

...Sumathisrini

How to handle your techno tots?

Is your toddler learning to play computer games and other electronic gadgets?

Do they spend more time with their keypads than their colouring charts? It's a good thing that they get exposed to the technological world, but it is also important to make your kids realize the value of other social activities too.

Introducing your child to technology through computers and electronic games is important, but there should be a healthy balance. It's even more important for your 'techno tot' to spend time in social activities with you and the family.

Here are a few simple tips to make your child to balance both the hi-tech gadgets and the practical world.

1. Physical activities:

Make your child to do things by his/her own hands. For example, holding a crayon or a pencil requires coordination and the use of the muscles. A handwritten note or the letter also requires patience. This makes your child not to depend on some other technological means. Through this practice, they learn to use their physic and mind, instead of depending on devices.

2. Parent's involvement:

Ebooks are great tools for helping your children to improve their reading skills without adult supervision. However, there is something special about a parent and child, reading stories together. A mom's facial expression or a father's special sound effects adds a quality that cannot be duplicated in an Ebook. Spend some quality time with your child so that he/she gets fascinated with your descriptions.

3. Outdoor activities:

Involve the children in the outdoor activities too. Learning to jump rope, planting a garden or playing leap frog with a sibling are very good physical exercise which also help them mentally. Besides the physical strength you toddler gains from playing, he or she also learns self-control and develops a sense of self-worth.

When you teach them to balance the reel and the real, it means you are ensuring them a confident and healthy future.

4. Praise the child:

Whenever you have time, ask your children about the story that just have heard and make them recall as many details as possible. Praise their learning skills. Treat them with a special reward if they recall specific details. Let them feel that listening, learning and memorizing are fun.

Mom vs Kids

When to stop breast feeding for baby?

Rudhraa

You can feed your baby till 1 to 1.5 years. This will build stronger bond with your little one. And also don't stop it all in a sudden, stop it step by step.

Mahis

It is best to feed breast milk up to one year and six months. But one year is enough, if we feel to stop.

But don't stop suddenly. It is not good for both mother and child. For that you can introduce solid food.

Beula

It is good for baby as well as you to breast feed at least for 2 years. You can start now to give juices, fruits and vegetables as additional food. If you give this additional food, obviously baby will take less amount of breast milk. Like this you can slowly stop breast feed. You can give additional food in morning after 9.00 am to mid day. This method will help baby for easy digesting.

Non Veg food ideas for 1 year baby

Sumitra
You can give chicken/mutton from 11 months and fish/prawns after 18 months. You can give well-cooked pieces from the gravy, especially liver as that is really rich in iron along with his usual rice/dal/rasam.

But please consult your doctor before giving non veg food of any kind to your child.

Priyagautham
Any non veg that you cook for yourself can be given. Make it bite size pieces or mince it slightly.

Also can use chicken or mutton mince. Cook it the usual way but add peas to your normal preparation this way kid eats both veg and non veg.

Egg - boiled, scrambled, omelets or scramble prepared with vegetables i.e. cauliflower or cabbage.

Chicken - mince with peas, soups (Indian way or chicken with sweet corn) etc. I always add some veg to any non veg gravy I cook. Radish, turnip, potatoes, peas, spinach, carrot, beans, drumstick etc. Also I prepare gravies with coconut and cashews. They contain essential oils and amino acids that are good for brain so even if you avoid this for adults always include it for your child in their food.

I don't cook much mutton but you can use lamb mince to make Indian version spaghetti Bolognese.

Give the kid loads of fish. Simply bake with some salt, light sprinkling of salt and lemon juice. You can bake in a sheet enpapillote with herbs too.

Another way is get fish fillets and smear any shop bought tomato based pasta sauce. Bake covered, simple and tasty way to feed fish. This works well with chicken to. Add a bit of boiled pasta and some steamed veg making it a wholesome meal that can be eaten by even adults in the family.

Fish pie - it takes time and effort to make these but it is a complete meal i.e. protein, veg and carbohydrate packed in one dish.

My experience and the advice I got is that kids easily adapt to non veg eating. If it is vegetables, they may say no. So I gave my DD only egg until one. After wards fish, particularly fish pie and finally chicken but cooked with veg. Started prawns quite late, but she loves it.

A Parenting Checklist

...Rameshshan@RameshShanmugam

Article published by WHO

What is the harm in giving water, honey, glucose water or artificial milk in the first few days?

Such feeds given to newborns before the free flow of milk from the breasts are called, prelacteal feeds. These can be harmful for you as well as your baby and should be avoided.

If prelacteal feeds are given, the baby may not suckle adequately at the breast as her stomach is already full. Consequently, she will not get colostrum. Such feeds may also be contaminated and result in serious infections. Allergies are more common in babies given animal milk (including powder milk) in the first months of life. If these feeds are given through a bottle, the baby may not make the required effort to suckle and empty the breast. This either results in breastfeeding failure or may cause engorgement and infection of the breasts.

Some health workers give prelacteal feeds to otherwise normal babies who happen to be rather big in size or are small. They fear that these babies may get hypoglycaemia (less sugar in blood). This fear is unjustified. Colostrum is enough for these babies.

Some health workers give water or glucose water, fearing that the baby may get dehydrated. Babies are born with a store of water and such feeds are therefore unnecessary.

Sometimes, a prelacteal feed is given as a 'test feed' to safeguard aspiration into the lungs in a rare condition called tracheoesophageal fistula. In this condition, the trachea (the windpipe) is connected to the oesophagus (the food pipe).

These health workers do not realize that colostrum is a physiological secretion. Even if it is aspirated into the lungs, it is not irritating and gets readily absorbed. On the other hand, sugar, water and artificial milk are quite irritating if aspirated.

Iron-rich snacks during pregnancy

...nlakshmi @ Lakshmi

If you are looking for quick and easy ways to increase the amount of iron you eat, try some of these iron-rich snacks:

- Raw coconut slices
- Raisins and Dates
- Nuts such as Walnuts, Pista, Cashewnuts.
- Roasted pumpkin seeds, Groundnuts and jaggery.
- Iron fortified cereals and grains
- Egg yolk salad

Ways to increase iron in your daily food:
These 'power foods' can help increase your daily iron intake:

- Leafy greens such as fenugreek (Methi), spinach (Paalak), Coriander (Dhania) and mint (Pudina) can be used for all sorts of foods. Use them to make raitas, salads, fillers for sandwiches, stuffed paranthas or rotis.
- Soya nuggets can be added to pulaos and salads. Or cook them with potatoes or other vegetables such as capsicum and peas).
- Legumes (lentils and beans) such as bengal gram (chana), chickpeas (kabuli chana), kidney beans (rajma), yellow gram (moong dal), pigeon peas (toor dal). You can increase the amount of iron in your dal by adding leafy greens such as spinach (paalak), radish leaves.
- Meat is one of the best sources of iron. So if you are non-vegetarian you can choose from meats such as chicken, mutton, turkey and cuttlefish.

What helps my body to absorb iron?
Vitamin C helps your body to absorb the iron you ingest with your food. So try to take vitamin C with your meals of when you are taking your iron supplement. This is especially important if you are a vegetarian because the iron from vegetarian sources is not absorbed by the body as easily as iron from non vegetarian sources.

To take vitamin C with your food, you can sip lemonade (nimbu pani) with your meals. A glass of vegetable juice with carrots, beetroots, mint (pudina), tomatoes, coriander (dhania), and a dash of lime is another nutritious option. A bit of spinach (paalak) in this juice provides an interesting taste.

Add variety to your meals by eating other vitamin C enriched foods such as:

- Pickled Indian gooseberry, Guava chutney and Tomato salsa.

Save some time and have some foods rich in both iron and vitamin C such as:

- Broccoli, Peas, Cauliflower & Ladies finger.

If your iron levels are still low, your doctor may ask you to take iron pills. Make the most of your iron supplement by having it with a glass of orange juice (or any citrus juice you would like).

What stops my body from absorbing iron?
Calcium inhibits the absorption of iron. So don't take your iron and calcium supplements at the same time. And don't drink milk with your meals for the same reason.

Tea, coffee, colas and other fizzy drinks also make it difficult for your body to absorb iron. So don't have any caffeine drinks along with your meal or iron supplement.

Tips for Glowing Skin

...Adhithi

- Mix oats powder with rose water and apply it on face for 30 mins. It will give glowing skin.
- Use papaya, honey and orange. Mix it & do massage with it up to 25-30 mins. You will found definitely a glowing skin.
- Mix milk powder in fresh milk and also add half egg. Now apply for 20 min. for wrinkle free and glowing skin.
- Mix fresh milk with lemon juice. Apply on the face and make smooth massage on face. It removes the dust on your face. Try it daily for normal skin.
- Wash your face with coconut water. It will leave your face clear and gives you a glowing skin.

அழகுக் குறிப்புகள்

...Sudhavaidhi

- தேமல் மறைய, சுக்குடன் சிறிது துளசி இலைகளை வைத்து மையாக அரைத்து தேமல் மீது பூசி வர தேமல் மறைந்து, சருமம் இயல்பு நிலை அடையும்.
- முகத்தில் இருக்கும் கரும் புள்ளிகள், தழும்புகள் மற்றும் முகப்பருக்கள் நீங்க அவரை இலை சாறு தினமும் முகத்தில் பூசி காயவிட்டு குளித்து வந்தால் முகம் பளபளக்கும்.
- கரும்புள்ளிகள் நீங்க குப்பை மேனிக் கீரையை எடுத்து அதனோடு மஞ்சள் மற்றும் உப்பு சேர்த்து மை போல அரைத்து தேகத்தின் மீது தேய்த்து சிறிது நேரம் கழித்து குளித்து வர வேண்டும். ஒரு மாதத்திற்கு இப்படி செய்து வந்தால் கரும்புள்ளிகள் மறையும்.

Trendy Necklace Collections

...Lali @ Lalitha

Art on the Broomstick

Deepa bala



Things needed:

- An old broomstick
- Adhesive
- Blade
- Thermocol sheet
- Black chart paper
- Scissors
- Pencil, eraser, ruler and sharpener

Method of painting:

- Stick the black chart paper on the thermocol sheet.
- Draw an object or a landscape.
- Slit the end of the broomsticks. Cut them into desired lengths and paste them on the picture,
- close to each other. See the lovely golden, ripple-like effect you have succeeded in creating.
- If you wish to paint the picture, go ahead.

Slokas for Kids

Ganga Sloka (Bathtime sloka)

Gangeycha Yamunechaiva Godavari
Saraswathi Narmade Sindhu Kaveri,
Jalesmin Sannithim Kuru

Meaning

In this water, I invoke the presence of holy waters from rivers ganga, yamuna, sindhu, godhavari, narmada and kaveri

Crafts Gallery

Deepabala's Clay Work

Uppilisriniva's Glitter Painting

Sujibenzic's Digital Art

Health benefits of Small Onion

...gKarti@Kartiga

Shallots (Small Onion) - It have proven that all the varieties of onions, shallots are particularly effective against liver cancer cells. Shallots contain 6 times more phenoplast than onions. It helps the liver to remove toxins from the body and have glucosides to inhibit and kill cancer cells.

Regular consumption of shallots helps in the growth of bone tissues and it also reduces the risk of developing osteoporosis by 20%. It contains Prostaglandin A-1, a powerful agent that can lower blood pressure.

Shallots are linked to fight against stomach cancer and produce an anti-coagulant that thins out the blood and exhibits strong anti-platelet and are good for patients who suffer from heart disease, heart attack, and stroke.

They can lower the blood sugar in a patient that is suffering from diabetic by preventing the degradations of the insulin and increase the metabolism of the glucose.

Shallots contain sulfur contents that can make the skin look younger. Daily shallot intakes will be extremely helpful for you in the long run.

Shallots are also good in minerals and electrolytes such as iron, calcium, copper, potassium, and phosphorus.

Nutritional Value of Small Onion (For 100 gms)

Nutrients	
Energy	72 Kcal
Carbohydrates	16.80 g
Protein	2.50 g
Total Fat	0.10 g
Cholesterol	0 mg
Vitamins	
Folates	34 µg
Niacin	0.200 mg
Pantothenic acid	0.290 mg
Pyridoxine	0.345 mg
Riboflavin	0.020 mg
Thiamin	0.060 mg
Vitamin A	1190 IU
Vitamin C	8 mg

Electrolytes	
Sodium	12 mg
Potassium	334 mg
Minerals	
Calcium	37 mg
Copper	0.088 mg
Iron	1.20 mg
Magnesium	21 mg
Manganese	0.292 mg
Phosphorus	60 mg
Selenium	1.2 µg
Zinc	0.40 mg

...Angu Aparna

Health Tidbits

நடைப்பயிற்சி

...Subhashreemurali

நடைப்பயிற்சி இன்றைய காலக்கட்டத்தில் சிறந்த பயிற்சியாகும். இது இரத்த அழுத்தத்தை குறைப்பதோடு, இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்புச் சத்தின் (Low-density lipoprotein - LDL) அளவைக் குறைத்து, நரம்புகளுக்குப் புத்துணர்வு தந்து, எலும்புகளையும் உறுதியாக்குகிறது. எடையை குறைக்க விரும்புபவர்களுக்கும், உடலுக்கு வலுவான கட்டமைப்பு அளித்து ஆரோக்கியமானதாக இருக்க விரும்புபவர்களுக்கும் நடைப் பயிற்சி ஓர் எளிய உடற்பயிற்சியாக உள்ளது.

நீங்கள் வேலைக்குச் செல்லும் பயணத்தில் அதிகமாக நடக்க முனையுங்கள். ரயிலுக்கோ, பேருந்துக்கோ நடந்து செல்லுங்கள், கடைகளுக்கு நடந்து செல்லுங்கள். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் தூய்மையான காற்று வீசும் பகுதிகளில் நீண்ட நடைப் பயணம் சென்று நல்ல நேரத்தை செலவழித்து மகிழுங்கள்.

நடக்கும் முறைகள்:

- நெஞ்சை நிமிர்த்தி முன்னோக்கிப் பார்த்தவராக (தரையை பார்க்காமல்) இருபது அடி முன்னோக்கியவாறு நடங்கள்.
- நெஞ்சை உயர்த்தியவாறு தோள்களைச் சாதாரணமாகவும் கைகளைத் தளர்வாகவும் வைத்திருங்கள்.
- கைகளை முன்னும் பின்னும் ஒரே சீராக ஆட்டியவாறு (பக்கவாட்டில் ஆட்டாமல்), அதேவேளை நெஞ்சுப் பகுதியை விட உயர்த்திவிடாமல் நடந்து செல்லுங்கள். அதற்கேற்றவாறு உங்கள் கால்களும் பின் தொடரும்.
- உங்கள் அடிவயிற்றை கெட்டியாகவும், உறுதியாகவும் வைத்த நிலையில் முதுகை சமமாக நிமிர்த்தியவாறு உடலைச் சற்றே முன்புறம் சாய்த்தவாறு நடங்கள்.
- ஒரு நேர்கோட்டில் நடப்பதை போல் நினைத்து கொண்டு, அடிகளை சற்று அதிகமாக எட்டி வைத்து நடப்பதைக் கட்டுப்படுத்துங்கள். வேகமாக செல்ல வேண்டுமானால், காலடிகளை அருகருகே வைத்து விரைவாக நடங்கள்.
- இயல்பாக சுவாசியுங்கள். நடக்கும் போது ஆழமாக ஒரே சீரான வேகத்தில் சுவாசித்து ஆக்ஸிஜனை அதிகமான அளவில் உட்செலுத்திக்கொள்ளுங்கள். நடக்கும் போது வேகமாகவும் அதே நேரத்தில் மூச்சிறைக்கும் அளவிற்கு இல்லாமலும் பார்த்துக் கொள்ளுங்கள்.

Granny Remedies

...tnkesavan

வளரும் குழந்தைகளுக்கு உலர் திராட்சை சிறந்ததாகும். இதில் கால்சியம் சத்துகள் நிறைந்துள்ளதால் எலும்புகள் உறுதிபெறவும் பற்கள் வலுப்பெறவும் உடல் வளர்ச்சி பெறவும் இது உதவுகிறது.

குழந்தைகளுக்கு தினமும் இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு பாலில் போட்டு காய்ச்சி அருந்தச்செய்யுங்கள். இவ்வாறு பருகுவதால் மலச்சிக்கல் பிரச்சனை தீரும்.

உன்னைச் சரணடைந்தேன்...

ஜெயம் தரும் விஜயதசமி

...Rudhraa

நவராத்திரி திருவிழாவின் ஒன்பதாம் நாள் மகாநவமி அதாவது ஆயுத பூஜை என்று தொழில், கல்வி மற்றும் கலைகளை போற்றும் விதமாகவும், அதற்கடுத்த நாளான விஜயதசமியைத் வெற்றித் திருநாளாகவும் நாடெங்கும் உள்ள இந்துக்கள் தொன்று தொட்டு கொண்டடி வருகின்றனர்.

வருடந்தோறும் புரட்டாசி மாதத்தில், 9 நாட்கள் விரதத்துடன் தேவிகள் சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி இவர்களுக்காக கொண்டாடப்படும் பண்டிகையே நவராத்திரி. நவம் என்றால் ஒன்பது. ஆதிசக்தி தேவியை 9 நாட்களும் வெவ்வேறு ரூபங்களில் மக்கள் வழிபடுகின்றனர். ஆதிசக்தியானவள் அரக்கன் மகிசாசுரனுடன் 9 நாட்கள் போரிட்டு இறுதியில் அவனை வெற்றிவாகை சூடிய நாளே விஜயதசமி திருநாள் ஆகும்.

விஜய தசமி என்றால், வெற்றி தருகின்ற நாள் என்று பொருள்படுகிறது. ஆயுத பூஜையன்று சிறிய தொழிற் கருவி முதல் எல்லா வகை தொழில் உபகரணங்களையும் சுத்தமாகத் துடைத்து, சந்தனம், குங்குமம் இட்டு பூஜைகள் செய்த பிறகு எடுத்து தொழிலுக்குப் பயன்படுத்துவது ஆயுதபூஜையின் சிறப்பம்சமாகும். மாணவர்கள் தங்கள் புத்தங்களுக்கு சந்தனம், குங்குமம் இட்டு பூஜைகளில் வைத்து வழிபடுவர்.

குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியை விஜயதசமி தினத்தன்று ஆரம்பித்து வைப்பது தொன்று தொட்டு பின்பற்றப்படுகிறது. அவ்வாறே இன்று தொடங்கும் அனைத்து நற்காரியங்களும் தொழில்களும் செழிக்கும் என்பது ஐதீகம்.

தீபாவளிப் பண்டிகை

...Sumathisrini

'தீபம்' என்றால் ஒளி, விளக்கு. 'ஆவளி' என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி, இருள் நீக்கி, ஒளி தரும் பண்டிகையே தீபாவளி ஆகும். தீபாவளி என்றாலே அனைவருக்கும் மகிழ்ச்சி தான். சூரியன் ஐப்பசி மாதம் துலாராசியில் நுழைகிறார். அப்போது திரயோதசி இரவு சதுர்தசி அதிகாலையில் தீபாவளித் திருநாள் கொண்டாடுகிறோம். தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம். ஒவ்வொருத்தர் மனதிலும் ஒரு சில இருட்டு உள்ளது. அகங்காரம், பொறாமை, தலைக்கணம் போன்ற எதையாவது ஒன்றை அகற்ற வேண்டும். ஒரு தீய குணத்தை எரித்துவிட வேண்டும்.

தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவதற்கான காரணங்கள் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறாகச் சொல்லப்படுகின்றன.

- மேற்கு வங்காளத்தில் காளியை வழிபடுவதற்கான நாளாக கொண்டாடுகின்றனர்.
- இலங்கை யுத்தத்தில் ராவணனை வென்று ராமபிரான் அயோத்தியா திரும்பிய நாளை கொண்டாடுவதாகவும் கூறப்படுகிறது.
- பதினான்கு வருடங்கள் வனவாசம் முடிந்து அயோத்தி திரும்பிய ஸ்ரீராமன், நாடு திரும்பிய நாளை, தீபங்கள் ஏற்றி மகிழ்ந்த நாளை, தீபாவளி எனச் சொல்கிறார்கள்.
- மகாபலியின் கர்வத்தை அடக்கி, மூன்று உலகங்களையும் வாமன அவதாரம் எடுத்து அளந்து அந்த அரசனின் பிடியிலிருந்து தேவர்களைக் காத்த நாளே தீபாவளியாகச் சொல்கிறார்கள்.
- ஸ்கந்த புராணத்தின் படி, சக்தியின் 21 நாள் கேதார கௌரி விரதம் முடிவுற்றது இத்தினத்தில் தான். விரதம் முடிவடைந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று 'அர்த்தநாரீஸ்வரர்' உருவமெடுத்தார்.
- சீக்கியர்களின் மத குருவான குருநானக் பிறந்த நாளாகக் கொண்டாடுகிறார்கள்.
- ஜைனர்கள் தங்கள் மதத் தலைவரான மகாவீரர் மகாநிர்வாணம் அடைந்த நாளாகத் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள்.
- ராஜபுதன வீரர்கள் இந்நாளை ஸ்ரீராமனை வழிபடும் நாளாகக் கொண்டாடுகிறார்கள்.
- மகாராஷ்டிரத்தில் நரக சதுர்த்தி என்று நான்கு நாட்கள் கொண்டாடுகிறார்கள்.
- உத்திரப்பிரதேசத்தில் அன்னபூரணியை வணங்கி, புதுக்கணக்கு தொடங்குவர். மூன்று நாள் தீபாவளியைக் கொண்டாடுவர்.
- பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய

மூதேவி, ஸ்ரீதேவியில் மூதேவியை உத்தாலகர் என்ற முனிவர் மணந்து, ஸ்ரீதேவியை மகாவிஷ்ணு மணந்த நாளே தீபாவளி எனச் சொல்கிறார்கள்.

- தென்னிந்தியாவில் கிருஷ்ணர் நரகாசுரனை வதம் செய்து இப்பூலோக மக்களை காப்பாற்றிய நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகிறது. நரகாசுரனை வதம் செய்ய எண்ணி திருமால் தேரில் வரும்போது, தன்னுடன் சத்யபாமாவையும் அழைத்து வந்தார். போரின் உச்சகட்டத்தில் சத்யபாமா அம்பெய்தி நரகாசுரனைக் கொன்றாள். பூர்வஜென்மத்தில் சத்யபாமா பூமிதேவியாக இருக்கும்போது பிறந்தவனே இந்த நரகாசுரன். அவன் பெற்ற வரத்தின்படி தன் தாயின் கையால் இறந்துவிட்டான்.

கொண்டாடும் முறை:
தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் எழுவர். இல்லத்தின் மூத்த உறுப்பினர் ஒவ்வொருவர் காலிலும் நலங்கு (மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவை) இட்டு மகிழ்வர். பின் எண்ணெய் குளியல் செய்வர். மக்கள் புத்தாடை உடுத்தி விஷ்ணுவையும், லஷ்மி தேவியையும், குபேரனையும் வழிபடுவர். தீபாவளி அன்று ஒவ்வொரு இல்லத்திலும் இனிப்புகள் நிறைய செய்து ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வர். பரிசுகள் தந்து மகிழ்வர். பெரியோரை வணங்கி வாழ்த்து பெறுவர். எண்ணெய் பலகாரங்களும், இனிப்புகளும் உண்பதால் செரிமானத்திற்காக தீபாவளி லேகியம் உண்பது மரபு. தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வர். ஏனெனில், அன்றைய தினம், அதிகாலையில் எல்லா இடங்களிலும், தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமியும், அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில் பூமாதேவியும், புத்தாடையில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக கருதப்படுவதேயாகும். அந்த நீராடலைத் தான் 'கங்கா ஸ்நானம் ஆச்சா' என்று ஒருவருக்கொருவர் விசாரிப்பர். அன்றைய தினம் எல்லா நதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளிலும், நீர் நிலைகளிலும் கங்கா தேவி வியாபித்து இருப்பதாக ஐதீகம்.

தீபாவளி லேகியம்

...Akshu Anitha

தேவையானவை
இளம் இஞ்சி - ஒரு பெரிய துண்டு.
மல்லி விதைகள் - 1 கப்.
ஜீரகம் - அரை கப்.
நெய் - 3 தேக்கரண்டி
வெல்லம் - 1 கப்.

செய்முறை

- கொத்தமல்லி விதைகளையும், ஜீராவையும், அரை குவளை தண்ணீர் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ளவும். பின்னர் இஞ்சியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி அதில், இந்த பேஸ்ட்டை கலந்து நன்கு நைசாக வருமாறு அரைத்துக் கொள்ளவும். பின்னர் இதில் வெல்லத்தை சேர்க்க வேண்டும். சேர்த்து கொதிக்க விடவும்.
- பிறகு மெதுவாக நெய்யை கலந்து அப்படியே கலக்கி வரவும். இந்தக் கலவையில் உள்ள நீர் அனைத்தும் ஆவியாகி, அப்படியே இறுக்கமான பேஸ்ட் ஆக மாறி விடும். இதுதான் தீபாவளி லேகியம் அல்லது தீபாவளி மருந்து.
- தீபாவளி பலகாரம் சாப்பிட்டு முடித்ததும் இந்த தீபாவளி மருந்தை உட்கொண்டால் வயிறு கெடாது, ஜீரணப் பிரச்சினை வராது.

லட்சுமி குபேர விரதம்

...Sumathisrini

எல்லோருக்குமே செல்வந்தர்களாக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. இதற்கு குபேரனுடைய திருவருள் வேண்டும். ஆனால் சிலருக்கு மட்டும்தான் அது வரமாகக் கிடைக்கிறது. இதற்குக் காரணம் பூர்வ புண்ணியம் என்று சிலர் சொல்வதுண்டு. உள்ளன்போடு முறையாக வழிபாடு செய்தால் நாம் எல்லோருமே குபேரர் ஆகலாம். அதற்கான ஒரு ஆன்மிக வழிதான் லக்ஷ்மி குபேர பூஜை. அதை எப்படி முறைப்படி செய்ய வேண்டும் என்று சொல்கிறேன்.

தீபாவளித் திருநாளில் லக்ஷ்மி குபேரனை பூஜை செய்வதால் நமக்கு திருமகள் அருளும் குபேரனுடைய அருளும் கிட்டும். ஏனென்றால், தீபாவளி தினத்தில்தான் மங்கள ரூபனாகிய சிவபெருமான் தன்னிடம் உள்ள நிதிப்பொறுப்புகளை குபேரனுக்கு அளித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

குபேர பூஜை செய்யும் முறை:
பூஜை தொடங்குவதற்கு முன்பு தேவையான பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டு இடையில் எழுந்திருக்காமல் மனதை ஒருமுகப்படுத்திச் செய்ய வேண்டும். பூஜை தொடங்கும் முன் ஒரு முறை குளிக்கலாம். காலையில் குளித்திருந்தால் மஞ்சள் நீர் தெளித்துக்கொண்டு, சிவப்பு நிறப் புடவையை அணிய வேண்டும். இரண்டு

குத்து விளக்குகள், ஒரு காமாட்சி தீபம் ஏற்றி பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

தீபாவளி கொண்டாடும் ஐப்பசி மாத அமாவாசை மிகுந்த நல்ல நாளில் மாலை 6 மணிக்கு மேல் குபேரனை நினைத்து பூஜை செய்தால், செல்வம் பெருகும். குடும்பம் நலம் அடையும். குபேரனின் திருவுருவப் படத்திற்கு பூமாலைச் சாற்றி 12 அகல் விளக்கை ஏற்றி வைத்து பால் பாயசம் செய்து, நைவேத்தியம் செய்ய வேண்டும். பூ, அட்சதையை கையில் எடுத்துக் கொண்டு 12 முறை இந்த ஸ்லோகத்தைச் சொல்ல வேண்டும்.

த்வாதஸ லிங்கஸ்துதி:
சௌராஷ்ட்ரே
ஸோமனாதஞ்ச ஸ்ரீசைல்யே
மல்லிகார்ஜுனம் உஞ்சைன்ய
மஹாகாளீம் ஓங்கார மமலேஸ்வரம்
பால்யம் வைத்யனாதஞ்ச டாகின்யாம்
பீமஸங்கரம் ஸேது பந்தேது ராமேஸம்
நாகேஸம் தாறுகாவனே
வாரணஸ்யாம்ஸு விஸ்வேஸம்
த்ரியம் பகம்கௌதமீதடே
ஹிமாலயேது கேதாராம் குஸ்மேஸஞ்ச
சிவாலயே ஹேதானி ஜ்யோதி லிங்கானி
ஸாயங்கால ஹபடேர் நித்தயம்
ஸப்த ஜன்மக்ருதம் பாபம்
ஸ்மரணேன வினிஸ்யதி:

குபேர நாமாவளி:
ஓம் குபேராய நம:
ஓம் நரவாகனாய நம:
ஓம் சிவஸகாய நம:
ஓம் ஸ்ரீநிவாச ஸந்துஸ்டாய நம:
ஓம் பம்மாவதி ப்ரிய அனுஜாய நம:
ஓம் யக்ஷராஜாய நம:
ஓம் தனதான்யாதிபதயே நம:
ஓம் மணி பத்ரார்ச்சிதாய நம:
ஓம் மான்யாய நம:
ஓம் மஹனீயாய நம:
ஓம் மஹார்ஹ மணி பூஷணாய நம:
ஓம் ஸ்ரீவித்யா மந்த்ர உபாஸஹாய நம:
ஓம் ஸ்ரீ லலிதாம்பிகா ப்ரிய பக்தாய நம:
ஓம் திக்பாலாய நம:
ஓம் நவநாயகாய நம:
ஓம் நிதினாம் பதயே நம:

பின் குபேரனுக்குரிய சுலோகம், அர்ச்சனைகளைச் செய்து பால் பாயசத்தை நைவேத்தியம் செய்த பின் கற்பூர ஆரத்தி எடுத்து, குங்குமத்தைக் கரைத்து, அதையும் ஆரத்தி எடுத்து நிறைவு செய்யவேண்டும்.

குடும்பத்தில் அனைவரும் இதில் கலந்து கொண்டு செய்வது நல்லது. பூஜை முடிந்தபின் எல்லோரும் பூ, அட்சதையைச் சேர்க்க வேண்டும். பூஜை செய்யும் முன் குபேரன் படத்தருகே வீட்டில் உள்ள காசு, பணம், வெள்ளிப் பத்திரங்கள், தங்க நகைகள் எல்லாவற்றையும் வைத்து அலங்கரிக்க வேண்டும். இந்தப் பொருள்களிலும் அட்சதையைச் சேர்த்து நமஸ்கரிக்க வேண்டும்.

அக்கம் பக்கம் உள்ளவர்களும் வந்து இதைப் பார்க்கச் சொல்லி அவர்களையும் அட்சதைப் போடச் சொல்லி அவர்களுக்கு பால் பாயசத்தைக் கொடுத்து வெற்றிலைப் பாக்கு, தாம்பூலம் தருதல் நல்லது. குபேரனுக்குப் பிடித்த பிரசாதம் பால் பாயசம். அதனால் தான் அன்று இதைச் செய்து நைவேத்தியம் செய்வது வழக்கம்.

ஓம் யஷயாய குபேராய வைஸ்ரவனாய தனதாந்யாதி பதயே தநதாந்ய ஸம்ரும்திம்மே, தேஹி தபாயஸ்வாஹ!
என்ற குபேர மந்திரத்தை தினமும் சொல்லி குபேரனின் பேரருளைப் பெறுவோம்.

தியாகத் திருநாள் (பக்ரித் பண்டிகை)

...Begumbee

உலக அளவில் இஸ்லாமியர்களால் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகை பக்ரித் ஆகும். இதனைத் தியாகத் திருநாள் என்றும், ஹஜ் பெருநாள் என்றும் குறிப்பிடுகிறோம். இப்பண்டிகை அரபு மொழியில் (Eid al-Adha) ஈத் அல்-அதா என்றழைக்கப்படுகிறது.

அல்லாஹ்வின் தூதரான நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகத்தை நினைவு கூறும் விதமாக இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.
சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நபி இப்ராஹிம் (அலை) அவர்களுக்கு நெடு நாட்களாக குழந்தை பாக்கியம் இல்லாதிருந்தபோது, இவரின் இரண்டாவது மனைவியான ஹாஜர் (அலை)
அவர்களின் மூலம் ஒரு ஆண் மகவு பிறந்தது. "இஸ்மாயில்" (அலை)
என பெயரிடப்பட்ட அந்தக் குழந்தையின் வழி வந்தவர்கள்தான் இன்றைய அராபியர்கள். இஸ்மாயில் (அலை) அவர்கள் பால்ய பருவத்தை எட்டியிருந்தபோது, அவரைத் தனக்கு பலியிடுமாறு அல்லாஹ்,
இப்ராஹிம் (அலை) அவர்களுக்கு கனவின் மூலம் கட்டளையிட்டான்.

இதனைப் பற்றி இஸ்மாயில் (அலை) அவர்களிடம் கூறிய இப்ராஹீம் (அலை), அவரின் அனுமதியுடன் பலியிட துணிந்தபொழுது, "ஜிப்ரீல்" (அலை) எனப்படும் வானவரை அனுப்பி அல்லாஹ் அதை தடுத்தான். மேலும் ஒரு ஆட்டை இறக்கி வைத்து, இஸ்மாயில் (அலை) அவர்களுக்கு பதில் அந்த ஆட்டை அறுத்து பலியிடுமாறு இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு கட்டளையிட்டான்.
இச்சம்பவத்தின் அடிப்படையிலேயே தியாகத்திருநாள் கொண்டாடப் படுகிறது. இந்தத் தியாகத்தை நினைவு கூறும் வகையிலேயே இஸ்லாமியர்கள் தங்கள் வீட்டில் ஆடு, மாடு, ஒட்டகம் முதலியவற்றை அல்லாஹ்வின் பெயரால் பலியிடுகின்றனர். அதன் பின்னர் இறைச்சியை மூன்று சம பங்குகளாக பிரிக்கின்றனர். முதல் பங்கை உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும், இரண்டாவது பங்கை ஏழைகளுக்கும், மூன்றாவது பங்கை தங்களுடைய தேவைக்கு எனப் பிரித்து பங்கிட்டுக் கொடுக்கின்றனர். இவ்வாறு பலியிடப்படும் ஆடுகள் ஊனம் இல்லாமலும், ஒரு வருடம் பூர்த்தியடைந்ததாகவும் இருக்குமாறு பார்த்து பலியிடுகின்றனர்.

தியாகத்திருநாளின் முக்கிய அம்சம் சிறப்புத் தொழுகைகள் நடத்தப்படுவதாகும். பெரும்பாலும் இந்தத் தொழுகை திடல் போன்ற திறந்த வெளிகளிலேயே நடத்தப்படுகின்றன. இந்நாளில் இஸ்லாமியர்கள் புத்தாடைகள் அணிந்து இத்தொழுகைகளில் கலந்து கொள்கின்றனர்.

இப்பண்டிகை ஒவ்வொரு வருடமும் அராபிய மாதம் 'துல்ஹஜ்' 10 ஆம் நாளில் கொண்டாடப்படுகிறது. வசதியுள்ள முஸ்லிம்கள் ஹஜ் செய்வது என்பது அடிப்படை கடமைகளில் ஐந்தாவது கடமையாகும். ஹஜ் செய்வது என்பது புனித பயணமாக 'மெக்கா' செல்வதாகும்.

இப்புனிதப் பயணக் கடமைகளில் கடைசியானது அல்லாஹ்விற்காக பலியிடுதலாகும். இது ஹஜ் மாதம் 10 ஆம் நாள் நடைபெறும். இது பெருநாள் தொழுகை நடைபெற்ற பின்னர் ஆரோக்கியமான ஆடு, மாடு, ஒட்டகம் என பலியிட்டு பங்கிட்டு கொடுக்கப்படுகிறது.
இப்பண்டிகை தியாகத் திருநாள் என பொருள்படும் அராபிய பதமான ஈத் அல்-அதா என்று அழைக்கப்பட்டாலும், தமிழ் நாட்டில் ஆட்டை பலியிடுவதை அடிப்படையாகக்கொண்டு பக்ரித், (அதாவது பக்ரு-ஆடு+ஈத்-பெருநாள்) என்ற உருது பதத்தில் அழைக்கப்படுகிறது.

மாங்கல்ய பலம் தரும் கேதார கௌரி விரதம்

...Sumathisrini

கேதார கௌரி விரதம் முழுக்க முழுக்க மாங்கல்ய பலத்தை அளிக்கக்கூடியது. ஐப்பசி அமாவாசையன்று வரக்கூடிய கேதார கௌரி விரதம் மிக முக்கியமானது. சிவனை நினைத்து வழிபட்டு எல்லா பலத்தையும் பெற்று சக்தி வெற்றி பெற்ற நாள் அது. இதனை சுமங்கலிகள் கடைபிடிக்கும்போது அவர்களுடைய மாங்கல்ய பாக்கியம் வலுப்பெற்று தீர்க்க சுமங்கலியாக்கும். கன்னிப் பெண்கள் கடைபிடிக்கும்போது அவர்களுக்கு நல்ல வரன்கள் அமையும். எனவே கேதார கௌரி விரதம் என்பது விரதங்கள் அனைத்திலும் மிக விசேஷமானது. கௌரி என்றால் அம்பாள். சிவனை நினைத்து விரதம் இருந்து, தியானித்து எல்லா பலத்தையும் பெற்ற நாள். தான் பெற்றதைப் போல் பெண்கள் அனைவரும் பெற வேண்டும் என்று அம்பாள் அருளும் நாள் அது.

கேதார கௌரி விரதம் அனுசரிக்கும் முறை:

ஆண்டுதோறும் புரட்டாதி மாதம் சுக்லபட்ச தசமியில் இவ்விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். இருபத்தோரிழைகள் கொண்டதும் இருபத்தோரு முடிச்சுக்கள் கொண்டதுமான நூலினால் உருவாக்கப்பட்ட மந்திரக் கயிற்றை செய்துகொண்டு அன்று முதல் சிவபெருமானை மண்ணால் ஆக்கப்பட்ட பிம்பத்திலும், கும்பத்திலும் பூஜித்து இவ்விரத்த்தை அனுஷ்டிக்க வேண்டும். தூய்மையான அழகான இடத்திலே மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை அமைத்து கும்பம் வைத்து, பூக்கள், வில்வம் முதலியவற்றால் அர்ச்சனை செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் கேதாரேஸ்வரனுக்கு இருபத்தோரு எண்ணிக்கை கொண்ட அப்பம், வடை, பழம், பாக்கு, வெற்றிலை, பாயசம், சர்க்கரை அன்னம், புளி அன்னம் முதலிய நைவேத்தியங்களை வைத்து தூபதீபம் காட்டியும் சோடோபோசார பூஜை செய்தும் கேதேஸ்வரனை வழிபடுதல் வேண்டும். இருபத்தோரு நாளும் பூஜையில் வைக்கப்பட்ட இருப்பத்தோரு முடிச்சுக்கள் கொண்ட நூலினை இருபத்தோராவது திதியான அமாவாசைத் திதியில் இடது கையில் கட்டிக்கொள்ளவேண்டும்.

இவ்விரத்தை அனுசரிக்கத் தகுதியானவர்கள்:

ஐந்து மாதங்களிற்கு மேல் கர்ப்பிணியாக இல்லாத பெண்களும், மாதவிலக்கு நீக்கப்பெற்ற பெண்களும் 21 நாட்கள் விரதமிருக்கலாம். ஏனையோர் மாதவிலக்கு அம்முறை வந்தபின் அமாவாசைத் திதிக்கு முன்னுள்ள 9 நாட்களோ 7 நாட்களோ மூன்று நாட்களோ அல்லது அன்றைய தினமோ

இவ்விரதத்தை அனுஷ்டித்து 21 முடிச்சிட்ட கயிற்றை இடது புஜத்திலோ அல்லது மணிக்கட்டிலோ கட்டிக் கொள்ளலாம். கேதாரகௌரி தினத்தில் பார்வதி சமேதரான சிவபெருமானை வழிபடவேண்டும். ஆண்களும் இவ்விரத்தை அனுஷ்டிக்கலாம்.

பூலோகத்தில் இவ்விரதம் பரவிய முறை:
சிவபெருமானின் அருகேயுள்ள நந்திகேசர் இவ்விரத மகிமையை சிவபக்தனான கந்தர்வராஜனுக்கு கூறியருளினார். விரத்தை அனுஷ்டித்துப் பெருமானை அடைந்த கந்தர்வராஜனும் மானிட உலகில் இவ்விரத்தைப் பரப்ப எண்ணி பூலோகத்தில் உஜ்ஜயனி பட்டணத்தின் மன்னனுக்கு கூறினான். மன்னனும் இவ்விரத்தினால் சிறந்த சுகபோகங்களைப் பெற்றான். மேலும் உஜ்ஜயனி தேசத்து வைசிய குலத்துப் பெண்களான புண்ணியவதியும், பாக்கியவதியும் இவ்விரதத்தை அனுசரித்தார்கள். மிகவும் வறுமையினால் வாடிய இவர்கள் இவ்விரதத்தை அனுசரிக்க சிவபெருமான் தோன்றி இவர்களுக்கு வேண்டிய செல்வத்தையும் நீண்ட ஆயுளையும் நல்வாழ்வையும் கொடுத்தருளினார்.

விரத பலன்:
இவ்வாறு சிரத்தையுடன் தம்பதிகள் சேமமாக இருத்தலும், பிணி நீங்கலும், வறுமை நீங்கி செல்வம் பெறுவதற்கும், கன்னியர்களுக்கு விரைவில் திருமணம் பெறுவதற்கும் சிவனருளைப் பரிபூரணாகப் பெறுவதற்கும் உகந்தது. கணவனும் மனைவியும் கருத்தொருமித்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே இவ்விரத்தின் அடிப்படைத் தத்துவமாகும். இவ்விரதத்தினை அனுஷ்டிப்பதால் ஐஸ்வரியம் பெருகும். வறுமையொழியும், நினைத்த காரியம் கை கூடும்.

Spiritual Notebook

அக்டோபர்
10 - சஷ்டி
13 - சரஸ்வதி/ஆயுத பூஜை
14 - விஜயதசமி
15 - ஏகாதசி
16 - பக்ரித் பண்டிகை
16 - பிரதோஷம்
18 - பௌர்ணமி
22 - சங்கடஹர சதுர்த்தி
25 - சஷ்டி
30 - ஏகாதசி

நவம்பர்
1 - பிரதோஷம்
2 - தீபாவளி
2 - சிவராத்திரி
3 - அமாவாசை
3 - கேதார கௌரி விரதம்
8 - சஷ்டி

தமிழ் மந்திரம்

அஞ்சிலே ஒன்று பெற்றான், அஞ்சிலே ஒன்றைத் தாவி,
அஞ்சிலே ஒன்று ஆறு ஆக, ஆருயிர் காக்க ஏகி,
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு, அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான், அவன் எம்மை அளித்துக் காப்பான்.

Jokes

Subhasreemurali

பிச்சை கேட்க ஆபீசிற்கா வருவது?

வீட்டிலே போய் கேட்டேன். ஐயா ஆபீசுக்கு போயிட்டாங்கன்னு அம்மா சொன்னாங்களே!

Ramyayuva

Professor: What's attention deficit hyperactive disorder?

Student: Jimbalakadibamba.

Professor: Sorry, I don't understand what you said?

Student: Same here sir!

Sriramajayam

நாலு நண்பர்கள் சேர்ந்து பேசிட்டு இருக்கும் போது ஒருத்தன்மட்டும் இங்கீலீஷல பேசுனா மத்தவங்க, "டேய் ஓவரா பீட்டர் விடாதே"ன்னு சொல்லுறமே...

யாரு அந்த பீட்டரு?

இங்கிலீச கண்டுபிடிச்சவனோ???

சொல்லுங்கன்னே சொல்லுங்க???

Jenifer Andriya

Wife to husband: Darling, doctor suggested me to go to Switzerland or Paris for relaxation, where shall we go?

Husband: Other doctor!

TNKesavan

டாக்டர்: பல்லு எப்படி விழுந்திச்சு?

பேஷன்ட்: அத வேற யாருகிட்டயாவது சொன்னா மீதி பல்லும் கொட்டிடும்னு என் மனைவி சொல்லியிருக்கா டாக்டர்!

Saranyasekar

ஆசிரியர்: நான் உனக்கு முதலில் இரண்டு கோழி தருகிறேன். அடுத்து இரண்டு கோழி தருகிறேன். இப்ப உன்கிட்டே எத்தனை கோழி இருக்கும்?

மாணவன்: 5 இருக்கும் சார்!

ஆசிரியர்: நல்லா கேளு... முதல்லே இரண்டு கோழி தர்றேன், மறுபடியும் இரண்டு தர்றேன், இப்ப உன்கிட்டே எவ்வளவு இருக்கும்?

மாணவன்: 5 தான் சார்.

ஆசிரியர் (பெருமூச்சு விட்டவாறு): உஷ்... முடியலடா. சரி, இதுக்கு பதில் சொல்லு. முதல்லே இரண்டு ஆப்பிள் தர்றேன். அடுத்து ரெண்டு ஆப்பிள் தர்றேன். மொத்தம் எத்தனை ஆப்பிள் இருக்கும்?
மாணவன்: 4 சார்.

ஆசிரியர்: தப்பிச்சேன்... இப்ப கோழிக்கு வருவோம், முதல்ல 2 கோழி தர்றேன். பிறகு 2 கோழி தர்றேன். உன்கிட்டே மொத்தம் எத்தனை கோழி இருக்கும்?

மாணவன்: 5 சார்.

ஆசிரியர்: அடேய் லூசுப்பயலே... எப்படிடா 5 கோழி வரும்?

மாணவன்: என்கிட்டே ஏற்கனவே வீட்டில் ஒரு கோழி இருக்கு சார்.

Movie Review

ராஜா ராணி

...Geetha A @ Anu



சில திரைப்படங்கள் வருவதற்கு முன்பே மிக மிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விடும். அதற்கு நமது தொலைக்காட்சிகளில் வரும் திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் நடிகர்கள் பற்றிய கிசுகிசுக்கள் ஒரு காரணமாக இருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு திரைப்படம்தான் ராஜா ராணி. வாங்க படத்தை பார்க்கலாம்.

நான்கு பேர் மூன்று காதல் இதுதாங்க ராஜா ராணி. ரெஜினா(நயன்தாரா)வும் ஜான்(ஆர்யா)வும் திருமணமாகும் காட்சியில் ஆரம்பிக்கிறது திரைப்படம். இருவருக்கும் பிடிக்காமல் நடக்கிறது திருமணம். இதனால் இருவரும் பேசிக் கொள்வதில்லை. ஜான் தினமும் குடித்து விட்டு வருவது ரெஜினாவிற்கு பிடிப்பதில்லை. மனவருத்தம் ஏற்படும் பொழுது ரெஜினாவிற்கு வலிப்பு நோய் வருகிறது. இவரை மருத்துவமனையில் சேர்க்கும் பொழுது மருத்துவர் கேட்கும் எந்த கேள்விக்கும் ஜானிற்கு பதில் தெரிவதில்லை. அதனால் மருத்துவர் இவருக்கு அறிவுரை கூறி விட்டு செல்கிறார். அதற்காக முதன் முறையாக ரெஜினாவிடம் பேசும் ஜான் மருத்துவருக்காகவாவது இந்த நோய் வந்த விவரங்களைக் கேட்கிறார். முன்கதையைக் கேட்ட ஜானிற்கு ரெஜினா மீது ஈடுபாடு வருகிறது. இதே போல் ஜானிற்கும் ஒரு முன்கதை இருக்கிறது. இதைக் கேட்ட பிறகு ரெஜினாவிற்கு ஜானின் மீது காதல் வந்து இருவரும் வாழ்வில் இணைந்தார்களா என்பதே ராஜா ராணி.

ஒரு மனிதனின் வாழ்வில் காதல் முக்கியமானதுதான். ஆனால் கிடைக்காத காதலுக்காக வாழ்வே சூனியமாகி விடாது என்பதே ராணி சொல்லும் ராஜாவின் கதை, ராஜா சொல்லும் ராணியின் கதை.

நயன்தாரா நீண்ட இடைவெளிக்கு பிறகு தலை காட்டி இருக்கும் படம் தான் இது. நடிப்பில் மிளிருகிறார். வலிப்பு வரும் காட்சியிலும், காதலனைப் பிரிந்த காட்சியிலும் சபாஷ் வாங்குகிறார். ஜெய்யின் அப்பாவித்தனமான நடிப்பு

ராஜா ராணி

நமக்கு புதியதில்லை. ஆனாலும் அவரின் அப்பாவித்தனமான முகமும், நண்பர்கள் மிரட்டும் பொழுது அழுவதும் மிகவும் ரசிக்கும் காட்சி. முன்பகுதியில் குழந்தைத்தனம், பின்பகுதியில் மிடுக்கு ரசிக்கும்படி உள்ளது.

வழக்கமாக துடிப்போடும், துடுக்கோடும் நடிக்கும் ஆர்யா இதிலும் சளைக்க வில்லை. நயனின் அன்புக்கு ஏங்கும் காட்சியிலும், நஸ்ரியாவைத் துரத்தி துரத்தி காதல் செய்யும் பொழுதும் இன்னொரு காதல் மன்னன்.

நஸ்ரியா அழகு பதுமையாக வந்து அனைவரையும் கொள்ளை கொள்கிறார். தன்னைப் பற்றி சொல்லி, பாசத்திற்காக ஏங்கி "எங்க அம்மா மடியில படுத்ததே இல்ல, உன் மடியில படுத்துக்கட்டுமா" என்று கேட்கும் பொழுது நமக்கும் அந்த பாசத்தின் தவிப்பு தெரிகிறது. பிரதர், பிரதர் என்று சொல்லும் காட்சி ரசிக்கும் படி உள்ளது முதலில், பின்பு அதுவே முகம் சுளிக்க வைக்கிறது. சந்தானம் நகைச்சுவை கொஞ்சம் ரசிக்க வைக்கிறது. சத்யராஜ் சில காட்சிகளில் நடித்தாலும், அப்பா, மகளின் நெருக்கத்தை சொல்கிறார்.

இயக்குநர் அட்லி இன்னும் கொஞ்சம் மெனக்கெட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. கதைக்காக செலவிட்ட நேரத்தை விட பீருக்காக அதிகம் செலவிட்டிருக்கிறார். அதிகமாக அனைவரையும் அழ வைத்திருக்கிறார் (கிளிசரின் செலவும் அதிகம்).

சில வசனங்கள் ரசிக்கும் படி இருக்கிறது. "கல்யாணத்திற்கு முன்னாடி ஒருத்தன் குடிக்கிறான் என்றால் லவ் பெயிலியர், அதுவே கல்யாணத்திற்கு பின்னாடி ஒருத்தன் குடிக்கிறான்னா வாழ்க்கையே பெயிலியர்", "நம்ம கூட இருக்கறவங்க நம்மல விட்டு போயிட்டாங்கன்னா, நாமளும் கூடவே போகனும்னு அர்த்தம் இல்ல. என்னைக்காவது ஒரு நாள் நாம ஆசைப்பட்ட மாதிரி நம்ம லைப் ஒரு நாள் மாறும்".

இசை ஜிவி பிரகாஷ், பின்னணி இசை ரசிப்பு, பாடல்களும் ஏற்புடையதாக இருக்கிறது.

மொத்தத்தில் ராஜா ராணி அரியணை ஏறலாம்.

My அங்காடி

MY ANGADI .com

Online Tamil Book Store / Cds DVDs



Tamil & English Books

- Educational Books
- Parenting Books
- Pregnancy Books
- Stories & Novels
- Literature Books
- Historical Novels
- Competitive Exams Books
- Motivational Books
- Favourite Author's Books & Most Popular Books

Buy Now

@ one place
www.MyAngadi.com

Free shipping across India for purchase above Rs. 500*

Dinner Recipes

Chapathi with Baby corn Masala

...Umastalin

Making Chapathi As usual

Baby corn Masala

Ingredients:
Baby corn - 8 nos
Capsicum - 1/2 no to 1 no
(chop big size cubical)
Onion - 2 nos roughly sliced &
2 nos cubed onion (Size litte big)
Tomato - 2 to 3 nos roughly sliced
Turmeric, salt, Chilli powder
Cumin seeds and jeera
Milk - 1/2 cup
(for richness you can add coconut milk also)
If required you can add fried panner

Method:

- Cut each baby corn into 2 to 3 pieces, pressure cook it with some salt and turmeric powder. After cooked filter the excess water.
- Heat a pan, add 1 spoon oil, add cumin seed to sputter, add roughly sliced onion saute for some time, add tomato cook for 2 to 3 mins. Keep it aside to get cool. After cooling make it fine paste.
- On the same pan saute cubed onion & capsicum. Keep aside (if you require panner include it in the saute).
- Same pan heat 1 spoon oil add cumin seeds and jeera (both 1/2 tea spoon) after sputter, add the ground paste.
- Add 1 spoon chilli powder, salt (for your taste) cook it for 2 mins.
- Now add cooked baby corn & cook for another 2 mins.
- Now add milk (coconut milk) cook for another 3 mins. when it comes to your required consistency (thicker or somehow liquid) add the capsicum & onion (panner).
- Garnish with coriander leaves. Serve it hot with chapathi.

Home made PavBhaji Masala ...sbsudha

Ingredients:

Potato - 3 (1/2 inch cubed)
Carrot - 2 (1/2 inch cubed)
Green peas - handful
Beans - few (cut in small pieces - optional)
Cauliflower - Few florets
(Cook in hot water separately)
Onion - 1 (finely chopped)
Tomato - 2 (finely chopped)
Butter - 2 tbsp
Capsicum - 1 finely chopped
(most important for the authentic taste)
Red chilli powder - 1/2 tsp
(can adjust spice as per your taste)
Pavbhaji masala powder - 1 tsp
Lemon juice - 1/2 tsp
Coriander finely chopped - 2 tbsp
Oil and salt - As needed

Method:

- Cook the veggies in cooker till done with little salt and haldi.
- Heat the oil and half of the butter together in a pan. Once hot, add the onions and capsicum pieces. Fry well.
- Add the tomato and mix well.
- Add salt, red chilli powder, pavbhaji masala powder and mix well till everything comes together like a gravy.
- Now add the cooked cauliflower.
- Slightly mash the cooked veggies and mix well with the gravy.
- Add little water so that it can all cook to become a semi solid gravy dish.
- Add chopped coriander to garnish and squeeze lemon juice on top.
- Once removed to the serving dish, put the rest of the butter on top and leave it before you serve for five mins. The natural butter melting on top and getting mixed with the dish gives the flavour.
- This can be served with rotis, phulkas, toasted pav bread pieces or even toasted regular bread pieces.

சம்பா ரவை இட்லி ...Revathivenu

தேவையானப் பொருட்கள்:

சம்பா ரவை - 3 கப்
உளுத்தம் பருப்பு - 1 கப்
மிளகு - 2 டீஸ்பூன்
சீரகம் - 2 டீஸ்பூன்
எண்ணெய் - 2 டீஸ்பூன்
பெருங்காயத்தூள் - சிறிதளவு

செய்முறை:

- சம்பா ரவையை வெறும் வாணலியில் வறுத்துக் கொண்டு மிக்சியில் அரைத்துக் கொள்ளவும். ரொம்பவும் நைசாக அரைக்க வேண்டாம்.
- பின்பு உளுத்தம்பருப்பை நன்கு நைசாக அரைத்துக் கொண்டு, இரண்டையும் தண்ணீரில் உப்பு போட்டு ஊற வைக்கவும்.
- காலையில் ஊறவைத்து இரவு செய்வதற்கு முன் சிறிது மிளகு, சீரகம், பெருங்காயத்தூள் கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டு கலந்து இட்லி தட்டில் வைக்கவும்.
- தேவை என்றால் மாவில் கேரட் கூடத் தூவிக் கொள்ளலாம்.

Sweet Paniyaram ...gshanthi

Ingredients:
Rava - 1 cup
Maida - 1 cup
Sugar - 1 cup
Cardomom
Coconut milk

Method:

- Take 1 cup each of ravai (white), maida and sugar and mix well.
- Add powdered cardamom.
- Mix in water to get a smooth batter.
- Keep it aside for a couple of hours.
- We can add a little coconut milk for added taste.
- Heat paniyarakal, pour oil and ghee mixed for better taste and prepare sweet Paniyarams.

Kuzhi Paniyaram ...Angu Aparna

Ingredients:

Idli batter - 2 cup
Onion - 2 medium size
Green chilli - 2 chopped
Curry leaves - 1 string
Urad dal - 1 tsp
Chana dal - 1 tsp
Mustard seeds - 1/2 tsp
Cumin seeds - 1/2 tsp
Oil - For tempering

Method:

- In a kadai, pour a table spoon of oil and heat and temper mustard seeds, chana dal, urad dal & cumin seeds.
- Then add curry leaves, chopped onions and green chillies and then fry it till onion gets golden colour.
- Now add the fried mixture to the idli batter.
- Heat the kuzhi paniyaram pan.
- Add 1/4 tsp of oil in each hole and pour the batter (in each hole). Let it cook for 3 minutes and flip it to cook on the other side of paniyaram.
- Serve it hot with coconut chutney or tomato chutney or kara chutney.

கோதுமை அடை ...Saradhamurugan

தேவையா
னப்
பொருட்கள்:

கோதுமை - 1 கப்
அரிசி - 1/4 கப்
துவரம் பருப்பு, கடலைப் பருப்பு
உளுத்தம் பருப்பு (3 பருப்பும் சேர்த்து) - 1/4 கப்
சோம்பு - 1/2 ஸ்பூன்
பெருங்காயத்தூள் - சிறிது
வரமிளகாய் - 3
இஞ்சி - சிறிது
பூண்டு - 2 பல்
உப்பு - தேவைக்கேற்ப

செய்முறை:

- கோதுமை, அரிசி, பருப்பு மூன்றையும்ஒரு மணி நேரம் தனியாக ஊற வைக்கவும்.
- கிரைண்டரில் மேலே கொடுத்துள்ள எல்லாப் பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து எடுக்கவும்.
- அரைத்த மாவை உப்பு சேர்த்து 2 மணி நேரம் புளிக்க விடவும்.
- தோசைக்கல்லை அடுப்பில் வைத்து கொஞ்சம் ஊத்தப்பம் போல் வார்த்து எடுக்கவும்.
- இத்துடன் காரச் சட்னி, தேங்காய் சட்னி வைத்து சாப்பிடலாம்.

Pumpkin Parathas

...Srikumarsavi

Ingredients:

Pumkin - 150 gms (grated)
Kasurimethi (dried fenugreek leaves) - 2 tsp (soaked in water and strained)
Garlic cloves - 2 (grated)
Ajwain powder - 1/2 tsp (roasted and ground carom seeds)
Jeera powder) - 1/2 tsp (roasted and ground cumin seeds)
Turmeric powder - 1/4 tsp
Dried and ground red chillies - 1/2 to 3/4 tsp (depending on taste)
Salt - To taste
Wheat flour - 1/2 kg
Refined oil - 1 tsp (for kneading dough)
Water - Little
Cholesterol-free butter for cooking

Method:

- Grate the pumpkin and keep aside.
- Soak kasurimethi in water for 5 mins.
- Grate the garlic cloves so that they mix well.
- To the grated pumkin, add strained kasurimethi, grated garlic and other masalas as enumerated above.
- Add wheat flour to this mixture and knead well as grated pumkin will leave some water content.
- When required add little water in order to make a soft dough. Now add 1 tsp of refined oil to the dough and finish it.
- Cover and keep for a few minutes bowl.
- Heat a tava (griddle) on medium flame.
- Roll medium sized, round parathas.
- Cook using any good quality cholesterol-free butter.
- You can serve hot accompaniments like dahi (with a dash of jeera powder, pudina powder and sendha/black/rock salt) and any favorite achaar.
- You can pack these parathas off for your kids with dahi and achaar too.
- You can store the leftover dough for the next day in a 'Wonderlier Bowl' or even a 'Star Bowl' if the quantity is less.

Muslim Chicken Biryani recipe

Ingredients:
Raw jeera samba rice or basmati - 1 kg
Chicken - 1 Kg
Onion - 400 gms
Ginger paste - 3 tsp
Tomato - 300 gms
Cinnamon - 3
Clove - 3
Cardamom - 3
Coriander leaves - 1 cup (chopped)
Mint leaves - 1 cup (chopped)
Red chilly power - 3-4 tsp
Green chilly - 4/ 5
Curd - 1 tbsp
Lime juice
Salt - To taste
Oil
Ghee
Kesar powder

Method:
- Pour oil in a pan as required
- Add cinnamon, clove and cardamom.
- Add chopped onion into thin long slice and try till golden brown.
- Add ginger paste and fry few mins.
- Add tomato cut into disc shape or round shape, finely chopped coriander leaves, chopped mint leaves, garlic paste, red chilly powder and green chilly. Fry for 4- 5 mins.
- Add little water (1/2 glass water) to cook chicken.
- With half cooked chicken add 1 kg of raw jeera samba rice or basmati (note: 1 kg rice = 4 ½ glass of rice, 1 glass of rice = 1 ½ glass of water).
- Then multiply in adding water to rice.
- Add little lime juice and ghee.
- Add little kesar (mix with little milk)
- Close the lid and heat in sim mode for 20 mins.

Note:
- Jeera or basmati rice, water measurement same.
- Additional flavour (I used to add little shakthi chicken masala 1/2 tsp).
- I used to add 1 tbsp coconut fry in a kadai without oil + 1 tsp saunf seeds and grind into powder. (No need to add water).
- Shakthi chicken masala + coconut powder - add this before adding curd method.

Soyachunks Mixed Veg Patties

Ingredients:
Soya chunks - 2 handfuls
Potato - 1 big
Carrot - 1/2 grated
Beans - 5 (chopped finely)
Green peas - Handful
Cauliflower - Grated handful
Onion - 1 (chopped finely)
Ginger garlic paste - 1 tsp
Green chilly - 2 (chopped finely)
Chilly powder - 1 tsp
Pavbhaji masala - 1 tsp
Garam masala - 1/2tsp
Salt - To taste
Bread slices - Up to 8
Coriander - 1 tbsp (chopped)
Cashews - 1 - 1/2 tbsp (chopped)
Oil - 2 tsp + oil to shallow fry patties

Preparation:
- Boil the soya chunks in salted water, rinse and squeeze the water.
- Grind in mixie to get Soya mince.
- Boil and mash potatoes.
- Grind the Bread in mixie to crumbs.

Method:
- In a nonstick kadai add 2 tsp oil.
- Add onions and saute until translucent.
- Add ginger garlic paste, green chillies and saute.
- Add dry powders (chilly, pavbhaji and garam masala) and salt.
- Saute for a minute.
- Now add the Beans, cauliflower, green peas and the minced soya and saute and cook until vegetables are 3/4 th cooked.
- Finally add grated carrots, mashed potatoes, coriander leaf, cashews and cook for few more minutes.
- Mix Masala well.
- To the prepared masala add bread crumbs little at a time and mix well. It should form a thick dough. Do not add all the crumbs in one go.
- Make small balls of the masala dough and pat it flat.
- Heat a nonstick tawa and add/smear some oil. When hot cook the patties until crisp.
- Serve with tomato sauce.

Brinjal (Kathrikai) Gothsu

Ingredients:

Brinjal - 150 gm
Thoor dhal – 3 tbsp
Green gram dhal – 5 tbsp
Green chillies – 4 nos
Small onion – 10 nos
Tomato - 2 (medium size)
Asafoetida - small piece
Turmeric powder - A pinch
Coriander leaves
Curry leaves
Mustard, urad dhal and jeera - for seasoning
Oil
Salt - To taste
Tamarind - A small ball

Method:

- Boil thoor dhal, green gram dhal in a pressure cooker with turmeric, asafoetida and little castor oil.
- Cut brinjal, and tomato to small pieces.
- When dhal is cooked, add brinjal, tomato, green chilies, tamarind, onions and cook till the brinjal is cooked.
- Now mash the brinjal along all the ingredients with the help of mathu.
- No ingredients should be visible.
- Now season with mustard, urad dhal, jeera and curry leaves.
- Add coriander leaves, and cover for two minutes.

Note:

- Do not remove the calix of the brinjal, it is the tastiest portion of brinjal.
- We can use ridge gourd instead of brinjal.

வாழைப்பூ பொரியல்

www.rakskitchen.net

தேவையானவை:

வாழைப்பூ - 1
தேங்காய் துருவல் - 1/2 கப்
மஞ்சள்தூள் - 1/2 டீஸ்பூன்
புளித் தண்ணீர் - சிறிதளவு
கடுகு - 1/4 டீஸ்பூன்,
உளுத்தம்பருப்பு - 1/2 டீஸ்பூன்,
மிளகாய் வற்றல் - 3
கறிவேப்பிலை - சிறிதளவு
பெருங்காயத்தூள் - சிறிதளவு
மோர் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு

செய்முறை:

- வாழைப்பூவை ஆய்ந்து நடுவில் நரம்பு போல் உள்ள காம்பை எடுத்துவிட்டுப் பொடியாக நறுக்கி, சிறிது மோர் கலந்த தண்ணீரில் ஊற வைக்கவும்.
- பின் ஊற வைத்துள்ள வாழைப்பூ, புளித் தண்ணீர், உப்பு, மஞ்சள்தூள், சேர்த்து வேக வைத்து தண்ணீரை வடித்து நன்கு பிழிந்து வைக்கவும்.
- வாணலியில் எண்ணெய் விட்டு, கடுகு, உளுத்தம்பருப்பு, பெருங்காயத்தூள் தாளித்து, மிளகாய் வற்றல் கிள்ளிப் போட்டு, கறிவேப்பிலை, பிழிந்து வைத்திருக்கும் வாழைப்பூ, தேங்காய் துருவல் சேர்த்து நன்றாகக் கிளறி இறக்கவும்.
- சுவையான சத்தான வாழைப்பூ பொரியல் தயார்!!!

சுறப்பஞ்சு

- ஏகன்@ Arunkumar S.N

சில நாட்களுக்கு முன் ஒரு கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அங்கு சேர்வதற்கு ஒரு பெண்ணும் அவளின் அம்மாவும் வந்திருந்தனர். சிறிது நேரத்தில் அவர்களை அலுவலகத்திற்குள் அழைத்தனர்.

கல்லூரி அலுவலகத்திற்குள் நுழைகையில் அப்பெண்ணின் அம்மா செருப்பை கழற்றி விட்டு உள்ளே நுழைகிறார்கள். பிள்ளையோ அலுவலக அறையினுள் தொங்கவிடப்பட்டிருக்கும் போட்டோகளையும், கோப்பைகளையும் வேடிக்கை பார்த்தபடியே நுழைந்தாள்.

பிள்ளைகள் வானத்தில் கோட்டைகட்டி அண்ணார்ந்து பார்த்துக்கொண்டே உள்ளே செல்கிறார்கள், பெற்றவர்களோ முகத்தில் பயபக்தியுடன், கண்களில் பணிவுடனும் நுழைகிறார்கள்.

கல்லூரிக்குள் எப்படி நுழைய வேண்டும்?

வேண்டாம்.

கனவை எப்படிச் சுமக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்?

நம்பிக்கையோடு சுமக்க வேண்டும், மகிழ்ச்சியாக, உறுதியாக என பதில்களை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் சரியான விடை, பெற்றவர்களைப்போல் சுமக்க வேண்டும் என்பதே.

கனவு என்பது மகிழ்ச்சிகரமாக, இனிமையானதாக, மென்மையானாதாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருகிறோம். ஆகவே தான் கனவை மிக லேசாக எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் வெறும் கனவை வைத்துகொண்டு வாய்கிழிய பேசுகிறோம். கனவை நிஜமாக்குவது என்பது பிரசவ வேதனை.

நிஜமாகவே சொல்கிறேன் கனவு என்பது அழுத்தமானது, கனமானது, கடினமானது.

கடினம் என்றால் முடியாது என்பதல்ல. அதற்குக் கற்பனையைக் காட்டிலும் அதிகமான உழைப்பு தேவை. கல்லூரிக்குள் பெற்றவர்களும் பிள்ளைகளும் நுழைகிறார்கள். இருவருக்கும் ஒரே கனவு. எதிர்காலம் பற்றிய கனவு. ஆனால் ஒருவர் முகத்தில் ஆச்சர்யமும் மகிழ்ச்சியும். இன்னொருவருக்கோ மகிழ்ச்சியைக் காட்டிலும் கனவை சுமக்கும் பயமும் தெரிகிறது. இதில் எது சரி, யார் சரி? உங்களுக்கு இந்நேரம் புரிந்திருக்கும்.

எந்த ஒரு சாதனையும், லட்சியமும் ஒரே நாளில் பலித்து விடவில்லை. கனவிற்கான கூலி உண்மையிலேயே அதிகம் தான்.

கனவை மென்மையான புறா இறகாக எண்ணாதீர்கள். அது

அட்டை பூச்சி போல உங்கள் ரத்தத்தை மட்டுமல்லாமல் வியர்வையும் சேர்த்தே உறிஞ்சும். தாங்க முடியாத வலிகளுக்குப் பின்னால் நிச்சயம் உங்களுக்கான பொக்கிஷத்தைக் கொடுக்கும் குணமும் கனவிற்கு உண்டு.

பலர் கனவைப் பிடித்துக் கொண்டு ஓடிக்கொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டுள்ளனர். கனவைத் தூக்கிக் கொண்டு ஓடுவது அத்தனை சுலபம் அல்ல. நிஜமாகவே கனவைச் சுமந்தால் அதன் பாரம், பெற்றவர்கள் கண்ணில் தெரிவது போல் தெரியும்.

கனவை எப்படிச் சுமக்க வேண்டுமென்று செய்முறை பாடத்தை பெற்றோர்கள் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதில்லை... செய்து காட்டுகிறார்கள். நாம் தான் கவனிப்பதில்லை.

கனவு உங்களைப் பாடாய் படுத்தும். உயிரைப் பிழியும். ஆனாலும்... கனவிற்கான முயற்சியைக் கைவிடுவதும் தற்கொலைக்கு முயல்வதும் ஒன்று தான்.

காதலைப் போலவே கனவும் எளிமையாய் வந்து விடுவதுண்டு ஆனால் அதற்கான விலை பெரியது. கனவு காணும் எல்லோருமே கனவிற்காய் உழைப்பதில்லை. பலருக்கோ கனவிற்கும், கற்பனைக்கும் வித்தியாசம் தெரிவதில்லை.

கனவை எங்கே தேக்கி வைத்திருக்கிறோம் என்பது மிக முக்கியம். ஆழ்மனதிலா அல்லது இயல்பான கற்பனையிலா?

எப்போதும் கற்பனை செய்வதால் மட்டும் கனவு பலித்துவிடுவதில்லை. கற்பனையால் நேரத்தை மட்டுமே கரைக்கமுடியும். ஆகவே ஆழ்மனதில் உங்கள் கனவை பதித்து வையுங்கள் அது உங்களின் இயல்பையும் மாற்றும். உங்கள் கனவு நிஜமாவதற்கு உங்களில் என்னென்ன மாற்றதை செய்ய வேண்டுமோ அனைத்தையும் ஆழ்மனம் பார்த்துக்கொள்ளும்.

மற்றவர்கள் ஏதாவது காரியத்தை செய்வார்களா... அது தன் கனவிற்கு சாதகமாக அமையுமா என்று பார்ப்பவர்கள் எப்போதும் எதையோ எதிர்பார்த்துக் கொண்டே காலத்தையும் கனவையும் நசுக்குகிறார்கள்.

கனவு உங்களில் இருந்து தொடங்கினால் செயலும் உங்களில் இருந்து தானே தொடங்க வேண்டும்?

ஆம், நீங்கள் தான் உங்களுக்கான முதல் அடியை எடுத்து வைக்கவேண்டும். இரண்டாவது அடிக்கு உதவி கிடைக்குமா? என்றால் என்னிடம் பதில் இல்லை. ஏனெனில் அது யாருக்கும் தெரியாது. இரண்டல்ல... மூன்றல்ல... கடைசிவரை உதவி கிடைக்காமல் கூட போகலாம். வெற்றி வேண்டுமானால், கனவு பலிக்க வேண்டுமானால், தயாராய் இருங்கள்... கடைசிவரை தனியாகப் போராட.

Keep our city clean and neat

...PriyagauthamH

1. Like the most common answer to so many issues plaguing us these days the key to this problem is also - to start early i.e. educating our young children right from a young age the importance of maintaining cleanliness of not just our house but also of our surroundings too .

a. First we should instill in them the feeling of pride about our nation and also teach them that it is our duty and responsibility to look after and keep our country clean.

b. Teach young children to place waste material in appropriate bins. If no bin is found to carry the waste with them and dispose it later appropriately.

c. Children are like mirrors-They reflect what they see. So as parents, aunts, uncles we should follow what we teach them.

d. Also rather than sounding like advice giving them facts will be better absorbed. Eg: Rather than saying reduce plastic use. If we explain in simple terms the ill effects of plastic usage they think and understand better. This has lasting impact than empty advices.

2. Resident associations can join with local organisations similar to exnora and take initiative to ensure streets and local green and common areas have sufficient bins for disposing waste. Bins for recyclable waste and for waste that can be converted to compost should be provided. This way wastes ending up landfill sites will be reduced.

WE DO CARE CHARITABLE TRUST *...Mals*

The Trust aims to build an **'Old Age Home for Senior Citizens'** ; 'Shelter Home for Animals' and a 'Multi - Specialty Hospital for Animals'. Here are some activities of the trust,

- Donating food for people living in slums.
- Creative Camp for the less fortunate kids.
- Donation of clothes to the poor and lower middle class people.
- Feeding stray dogs everyday be it summer, winter or rain.
- Medical camp for dogs to get them vaccinated for rabies and get young puppies sterilized.

தொலைந்து போன ரேஷன் கார்டைத் திரும்பப் பெற

...Guna @ Silentsounds

அணுக வேண்டிய அதிகாரிகள்:
கிராமப்புறங்களில் வட்டார உணவுப் பொருள் வழங்கு அலுவலர்; நகர்பகுதிகளில் உணவுப் பொருள் வழங்கு துறை மண்டல உதவி ஆணையர்.

தர வேண்டிய ஆவணங்கள்:
காணாமல் போன குடும்ப அட்டையின் நகல் அல்லது ஏதாவது ஒரு அடையாள அட்டை

கட்டணம்:
புதிய ரேஷன் கார்டு வாங்கும்போது ரூ.10 கட்ட வேண்டும்.

கால வரையறை:
விண்ணப்பம் அளித்த 45 நாட்களுக்குள் கிடைத்துவிடும்.

நடைமுறை:
சம்பந்தப்பட்ட அலுவலரிடத்தில் காணாமல் போன விவரத்தைக் குறிப்பிட்டு கடிதம் தந்து, அவர்கள் வழங்கும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தர வேண்டும். அவர்களின் விசாரணைக்குப் பிறகு புது குடும்பஅட்டை அனுப்பி வைக்கப்படும்.

Online Voter ID Registration and Corrections

Apply online for the following forms through, **www.elections.tn.gov.in/eregistration/**

Form 6: Application for inclusion of name in Electoral Roll

Form 7: Application for Objecting inclusion or seeking deletion of name in electoral roll

Form 8: Application for correction to particulars entered in electoral roll

Form 8A: Application for transposition of entry in electoral roll.

வள்ளுவன் பக்கம்

...Parasakthi

குறள் பால்: அறத்துப்பால்
குறள் இயல் : இல்லறவியல்
அதிகாரம்: மக்கட்பேறு

61. பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.
விளக்கம் :
அறியவேண்டுவனவற்றை அறியும் அறிவு படைத்த பிள்ளைச் செல்வத்தைத் தவிர மற்றவற்றை ஒருவன் பெறும் நன்மையாக நான் எண்ணுவதில்லை.
Explanation:
Among all the benefits that may be acquired, we know no greater benefit than the acquisition of intelligent children.

62. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.
விளக்கம் :
பழிக்கப்படாத நல்ல குணங்களை உடைய பிள்ளைகளைப் பெற்றால், பெற்றவளை அவனுடைய பிறவிகள்தோறும் துன்பங்கள் தொடமாட்டா.
Explanation :
The evils of the seven births shall not touch those who abtain children of a good disposition, free from vice.

63. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.
விளக்கம் :
பிள்ளைகளைத் தம் செல்வம் என்று அறிந்தோர் கூறுவர். அப்பிள்ளைகள் உள்ளபடியே செல்வமாவது அவரவர் செய்யும் நற்செயல்களால் அமையும்.
Explanation :
Men will call their sons their wealth, because it flows to them through the deeds which they (sons) perform on their behalf.

64. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.
விளக்கம் :
தம் பிள்ளைகளின் சிறு கையால் பிசையப்பட்ட கூழ், அமிழ்தைக் காட்டிலும் மிக இனிது.
Explanation :
The rice in which the little hand of their children has dabbled will be far sweeter (to the parent) than ambrosia.

65. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.
விளக்கம் :
பெற்ற பிள்ளைகளின் உடலைத் தழுவுவது உடலுக்கு இன்பம். அவர்களின் பேச்சைக் கேட்பது காதிற்கு இன்பம்
Explanation :
The touch of children gives pleasure to the body, and the hearing of their words, pleasure to the ear.

நீயா நானா

...Surya

கடந்த மாதம் நடைபெற்ற நீயா நானாவின் தீர்ப்பும், அவற்றில் சிறப்பாய் பேசியவற்றின் மேற்கோள்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஜாதகம் என்பது உண்மையா - பொய்யா? ஜாதகம் பார்த்து பலன்கள் கணிப்பதும் அவற்றிற்கு ஏற்ப பரிகாரங்கள் செய்வதும் அவசியமானதா? அவசியமற்றதா?

இந்து சமூகம் உருவான காலம் தொட்டே நம்முடைய சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம் வலுப்பெற, உருபெற ஆரம்பித்துவிட்டது. பண்டைய காலம் முதல் இன்று வரை இதன் வளர்ச்சியும் வளர்ந்துகொண்டே இருக்கிறது. இது இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் உள்ள மற்ற நாடுகளில் கூட இதே போன்ற ஜோதிடம், வான சாஸ்திரம் முறைகள் உள்ளன.

வேத காலத்தில் ஞானி ப்ருகு அவர்களால் தோற்றுவிக்கபட்ட இந்த ஜாதகம் இன்று வரை மனித நம்பிக்கையில் செழித்து வளர்கிறது. அதே போல் இந்து சமூகம் தவிர்த்து சில சமூகங்களில் சாதகம் பார்ப்பதற்குத் தடையும், இதன் மீது நம்பிக்கை இல்லாமலும் இருக்கிறார்கள். எதிர்கால நிலையைக் கிரகங்களின் சஞ்சாரங்களைக் கொண்டு கணிக்கும் முறைப் பற்றி நம்முடைய வேத நூல்கள் பலவும் குறிப்பிடுகின்றன. மேலும் இன்றைய கணினி யுகத்தில் இதன் மென்பொருள் வளர்ச்சியும் சேர்ந்து எளிமைப்படுத்துகிறது. இவைக் குறித்த ஆராய்ச்சிகளும் ஆய்வுகளும் நடந்து கொண்டே தான் இருக்கிறது.

“நல்லவற்கில்லை நாளும் கோளும்” என்பது நம் தமிழ் மரபு. இதன் உண்மை தன்மை, மேலும் இதன் மூலம் கூறப்படும் பரிகாரங்கள் குறித்த நம் தேடலில் விடையைக் காண்போம். ஜாதகம் என்பது உண்மையா, பொய்யா என்ற விவாதத்தில் தங்களது கருத்துக்களை சொல்லி தெளிவுபடுத்திய தோழமைகளுக்கு நன்றி.

தன் முதல் கருத்துடன் இந்தப் பதிவில் “மனிதனுக்கும் கோள்களுக்கும் உள்ள தொடர்பு பற்றிய ஆரய்ச்சி தேவை என்றும், இது நம் முன்னோர்களின் கொடை என்றும், காலம் குறித்து நம் முன்னோர்கள் என்ன கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள்... அவர்களுடய தீர்க்க தரிசனம் எப்படி இருக்கிறது” என்று சொல்லி அசத்திவிட்டார் தோழி **ஆர்த்தி.**

“ஜாதகம் உண்மை என்றும், அதைக் கணிப்பதற்கு தனித்திறமை வேண்டும், முந்தைய ஜென்மத்தின் பாவ பலன்களே இந்த ஜென்மத்தில் நாம் ஜாதகம் என்ற முறையில் அனுபவிப்பது” என்று தன் கருத்தை வைத்துள்ளார் தோழர் **வின்னர் போர்ன்.**

“ஜாதகம் என்றால் என்ன? பரிகாரம் என்றால் என்ன? ஜாதகம் ஏன் பார்க்க வேண்டும்? ராமேஸ்வர திருக்கோயில், காளஹஸ்தி, வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள சிறப்பு அம்சம் மற்றும் அதில்

நடக்கும் சிறப்பு பரிகாரம் பற்றிய தெளிவான விளக்கம் கூறி இந்தப் பதிவில் முதல் கருத்தை முன்வைத்துள்ளார்" தோழி **விஜி**.

இந்தப் பதிவின் சிறப்பாக, ஒரு தேர்ந்த வல்லுனராக **அம்மு ராதிகாவின்** கருத்து நம்மை ஒரு புதிய கோணத்திற்கு அழைத்துச் செல்கிறது. "ஜோதிடம் பற்றிய ஒரு சிறு குறிப்பில் எந்த ஸ்தானதில் எந்த கிரகங்களின் நிலை எப்படி இருக்கும் என்று ஜாதக அமைப்பின் முறையைப் பற்றி தெளிவுபடக் கூறி நமக்கும் ஜாதகம் என்றால் என்ன" என்பதைப் பற்றி சொல்லி அசத்திவிட்டார் தோழி. மேலும் அதைக் கற்றவர் என்றவர் முறையில் அதன் மகத்துவம் அறிந்தவராய், **"ஒரு நல் வைரம் மதிப்பை அறியாமல் தூக்கி எரிந்துவிட்டோமே என்ற ஆதங்கம் தான்"** என்ற ஜாதகம் பற்றிய அவரது இந்த கருத்து மேலும் நம்மை ஈர்க்கிறது.

மேலும் "ஜாதகம் உண்மையே என்றும் அதன் பரிகாரங்கள் எப்படிப்பட்டது, அதன் தன்மை என்ன, அதை எளிய முறையில் செய்து நாம் முழுப் பலனை அனுபவிப்பது எப்படி" என்றும் தெளிவான விதத்தில் கூறியுள்ளார். தன் அனுபவ அறிவின் மூலம் தெளிவான கருத்துக்களைக் கூறி மேலும் ஆழந்த தொழில் அறிவும் கொண்டு நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்திவிட்டார் தோழி **அம்மு ராதிகா**.

தோழி **வைஷாலி** தன் கருத்தில், "ஜாதகம் கணிப்பது விஞ்ஞானம் சார்ந்தது என்றும், அதைக் கணிக்கத் தெளிவான அறிவு வேண்டும் என்றும், இதை நாம் தினசரி வாழ்க்கைக்குப் பயன்படுத்தக்கூடாது என்றும், நாம் இதைக் கண்மூடித்தனமாக கையாளக்கூடாது" என்றும் சொல்லி விளக்கிவிட்டார்.

"ஜாதகம் கணிப்பது என்பது ஒரு கலை என்றும், போலிகளால் தான் ஜாதகத்தின் மீதான தவறான கண்ணோட்டம் ஏற்படுகிறது என்றும் கூறி, மேலும் எதிர்மறை நிகழ்வைப் பற்றி கூறும்போது அதில் ஏற்படுகின்ற குறையை நிவர்த்தி செய்ய கூடவே பரிகாரமும் உள்ளது" என்றும் தன் கருத்தை கூறியுள்ளார் தோழி **பிரபா**.

ஜாதகத்தைப் பற்றிய காளிதாசரின் வாக்குடன் ஆரம்பிக்கும் தோழி **சுபஸ்ரீ முரளி**, "கலப்பினாலும் போலியினாலும் தான் ஜாதகம் கெடுகிறது" என்று தன் கருத்தை முன் வைத்துள்ளார்.

"உண்மையான ஜாதக முறையில் உள்ள பரிகாரங்கள் எளிமையாகத்தான் இருக்கிறது. ஏமாற்றுப் பேர்வழிகள் தான் இதனை வியாபாரமாக வைத்து ஏமாற்றுகிறார்கள். மேலும் தொட்டதெற்கெல்லாம் ஜாதகம் பார்த்தால் நிம்மதி போய்விடும் என்றும், தேவையான முக்கியமான நிகழ்வுகளுக்கு மட்டும் பார்த்தால் போதும்" என்ற தோழி **செல்வி பாண்டியனின்** குழந்தை பேறு, மணப்பொருத்தம் பற்றிய வாதங்களும் அருமை.

தோழி **கௌரி மோகனின்** பரிகாரம் செய்வதன் நோக்கம், அதனால் ஏற்படும் உளவியல் மாற்றம், சனி - குரு பெயர்ச்சியும், அவற்றிற்குப் பரிகாரம் செய்யும் முறை பற்றிய வாதம் அற்புதம்.

இந்தத் தலைப்புச் சார்ந்த விவாதத்தில் பங்கு கொண்டு தத்தம் கருத்துக்களை முன் வைத்த நம் தோழமைகளின் அனைத்துப் பதிவுகளும் அருமை. இந்த நீயா நானாவில் சிறப்பாகப் பேசி பரிசு வென்ற தோழி **அம்மு ராதிகா (ராதா)** அவர்களுக்கு பெண்மையின் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.

சிறுகதை...

திருப்புமுனை

...Sujibenzic @ Sujana

"சொன்னா கேளு மாமா... இந்த பொழப்பு நமக்கு வேணாம்... கஞ்சியோ கூழோ முன்ன மாதிரி லேத்து பட்டறைக்கே போ... அரக்காசு கிடைச்சாலும் அது பாவ காசா இருக்கக்கூடாது", லட்சுமி கணவன் மணியிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள்.

"அட போ புள்ள... இந்த தொழிலுல என்ன கொறய கண்டிபிடிச்சவ? நாலு குடும்பத்துல அடுப்பெரியறது பாவ காரியமா?"

"ஆங்... அடுப்பு எப்படி எரியுது? காசுக்கு ஆசைப்பட்டு சின்ன புள்ளைகள அடிமாடு போல விக்க தரகு வேலை பாக்குறீயே... அது ஒசத்தியான புண்ணியமா? "

"உன்னோட பெரிய ரோதனையாப் போச்சு... நா என்ன கடத்தியா விக்குறேன்... அதுங்கள பெத்ததுங்களே சம்மதிச்சு அனுப்புதுங்க... இருக்க இடமும், வேளைக்கு சாப்பாடும், கூலியா காசும் குடுக்கறதுனா சும்மாவா? நல்ல வழிக்கு உதவுறேன்... அம்புட்டுதேன்... பெருசா பேச வந்துட்டா... சோத்த போடுறியா?"

"சொல்றத கேளு மாமா... எனக்கு மனசே ஒப்பல... அங்கெல்லாம் ரொம்ப கொடும படுத்துறாகளாமே... " என்று குழைவாகக் கெஞ்சியபடி உணவு பரிமாறினாள்.

" அட என்ன நீ நொய்யி, நொய்யினு மனுசன போட்டு புண்ணாக்குற... அப்படியெல்லாம் ஒன்னுமில்ல... பொராமக்கார பயலுவ நாலையும் கிளப்பிவிடுவானுக..." எரிச்சலுடன் ஒரு பிடி சோற்றை வாயில் வைக்கப் போனவன், அப்படியே நிறுத்தி, "இந்த நேரத்துல இதையெல்லாம் யோசிச்சு விசனப்படாத புள்ள... நீ சாப்பிட்டியா? உள்ள இருக்குற குட்டி ராசா என்ன சொல்றாரு?", என்று மூன்று வருடங்களுக்குப் பின் உண்டாகியிருந்த மனைவியைப் பார்த்து ஆதுரத்துடன் விசாரித்தான்.

மணியின் இந்த அன்புதான் லட்சுமியை கட்டிப்போட்டது... குடும்பப் பகையையும் மீறி, அவனையே கைப்பற்றியதற்கு காரணமும் இதே காதல் தான்.

எதிலும் மனைவி பேச்சுக்கு மறுபேச்சில்லாமல் கட்டுப்படுபவன், தொழில் விஷயத்தில் மட்டும் அசைந்து கொடுக்கவே இல்லை.

காரணி: 'பணம்'!

தன்னை உதாசீனப்படுத்திய லட்சுமியின் குடும்பத்தினர் முன்பு பணக்காரனாக வேண்டுமென்ற வெறி அவனுக்குள் பேயாட்டம் போட்டு ஆட்டுவித்தது.

உசிலம்பட்டியில் லேத்து வேலை செய்து கொண்டிருந்த மணியின் சுக்கிர தசையோ! சனி தசையோ! ஒன்றரை வருடங்களுக்கு முன், கோவை அருகே பஞ்சாலையில் பணிபுரிந்த பாண்டியன மூலம் அங்கு செயல்பட்ட "சுமங்கலித் திட்டம்" பற்றி தெரிய வந்தது.

பழைய நண்பனான பாண்டியன், மணியின் கையில் ஒரு கற்றை துண்டறிக்கைகளைத் திணித்து, " மாப்ள... இத படிச்சுப் பாரு... இப்படியெல்லாம் எங்க வசதி செஞ்சு தராய்ங்க! சொளையா மாசம் 3,000 ரூவா சம்பளம், வேளைக்கு சாப்பாடு, உறங்க மெத்தை, தலையணை, ரூமு, பண்டிக பருவத்துக்கு லீவு, பொழுதுபோக்கு, இதெல்லாம் பத்தாதுன்னு மூணு வருஷத்துக்கப்புறம் 45,000 ரூவா ரொக்கம் வேற... பொட்டப் புள்ளைகளுக்கு கல்யாண செலவுக்கு சரியா போயிடும்ல... இதுக்கு ஆள் பிடிச்சுக் கொடுக்கறவங்களுக்கு கமிசனா லம்பா ஒரு தொக குடுக்கறானுவ... நம்ம பக்கத்துப் புள்ளைகளுக்கு ஏதோ நம்மால ஆன உபகாரமாப் போகும்...

புண்ணியத்துக்குப் புண்ணியமும் ஆச்சு... காசுக்குக் காசுமாச்சு..."

"ஒரு கண்டிசன் மாப்ள... பண்ணிரெண்டுல இருந்து பதினெழு வயசுக்குக் கொறச்சலான பொட்ட புள்ளைகளா பாரு... சரியா?"

சிந்தனைக்கு இடமேயளிக்காமல், சடாரென்று காரியத்தில் இறங்கிவிட்டான் மணி.

ஆளை அசத்தும் பேச்சு சாமர்த்தியத்தை மூலதனமாக்கி, சுற்றுவட்டார கிராமங்களுக்குச் சென்று பஞ்சத்தில் நசிந்து போன பெற்றோரைப் பேசியே கவிழ்த்தான்.

வரதட்சணை பேய்க்கு பயந்து பிள்ளைகளுக்குத் திருமணமே ஆகாதோ என்று பீதியில் காலம் தள்ளிக்கொண்டிருந்த பரிதாபத்திற்குரிய ஜீவன்களும், பாட்டிலுக்குள் மாட்டிக்கிட்ட போதை ராஜாக்களும், சந்தோஷத்துடன் சம்மதிக்க, பருவகாற்றில் மலர வேண்டிய மொட்டுக்கள் சூறைக்காற்றை சந்திக்க வேலைக்கு அனுப்பப்பட்டன.

இடைத்தரகில் பணம் கொழிக்கவே, அதையே தன் பிரதானத் தொழிலாக மாற்றிக் கொண்டான்.

நாட்பட, மில் திட்டத்தின் ஜிகினா பூச்சுகள் உதிர்ந்து, குளறுபடிகள் தெரிய வந்தாலும், அவற்றைப் புறந்தள்ளி, தனக்கென்று ஒரு நியாயம் கற்பித்து, மனசாட்சியை மொத்தமாக அடகு வைத்தான் மணி.

பல இளம்பெண்களின் வாழ்வையும், குடும்பத் தரத்தையும் வளர செய்கிறானே என்ற பெருமிதத்தில், மனம் நிறைந்திருந்த லட்சுமிக்கு சமீபகாலமாக கேள்விப்படும் தகவல்கள் எதுவும் உவப்பானதாக இல்லை.

சில மாதங்களாக, தினம் ஒரு பஞ்சாயத்துடன் யாராவது வீட்டுக்கு வருவது வாடிக்கையாகி விட, லட்சுமிக்குள் சந்தேகக் கருமேகங்கள் சூழ்ந்து, எதுவோ சரியில்லை என்பதை உள்மனம் உணர்த்தியது.

மணியிடம் கேட்டால் சாக்கு போக்குகளும், சண்டைகளும் மட்டுமே சரளமாக வந்தன.

அன்று தெருமுனையில் இருந்த காய்கறிக் கடைக்கு, கிளம்பிய லட்சுமிக்கு, வழக்கமாக "இந்த மாதிரி சமயத்துல எங்கயும் போகாத... நானே வாங்கியாறேன்" என்று தடுக்கும் கணவன் தடை சொல்லாமல் வழியனுப்பி வைத்ததைக் கண்டு ஆச்சரியமாகிவிட்டது. சிறுபிள்ளையின் உற்சாகத்துடன், கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் மடமடவென்று வெளியேறினாள்.

இருந்தாலும், குழப்பம் சூழ்ந்த மணியின் முகம், அவளுக்குள் இனம்புரியாத கலக்கத்தைக் கிளப்ப, சிந்தனையுடன் நடந்து கொண்டிருந்தளை வீதி நாடகம் ஒன்று ஈர்த்தது.

லயித்து பார்த்தவளுக்கு மனதில் கலவரப் பந்து வேகமெடுத்து உருள, கடைக்குக் கூடச் செல்லாமல் வீடு நோக்கி நடையைத் திருப்பினாள்.

வீட்டுச் சுற்றுச்சுவரை நெருங்கும்போதே உள்ளிருந்து வந்த பேச்சுக் குரல்களில் தெறித்த காரமும், சோகமும், கால்களை நிறுத்திவைக்க, காதுகள் கூரானது.

"இப்படி பண்ணிபுட்டியேய்யா... நீயெல்லாம் ஒரு மனுசனா? நீ சொன்ன வார்த்தைய நம்பித்தானே பொட்டப்புள்ளைய அம்புட்டு தூரம் அனுப்பி வச்சோம். நாங்கதான் தெனந்தெனம் செத்து பொழக்கிறோம், அதுகளாவது மூணு வேள சாப்புட்டு, நல்லா இருக்கும்னு நெனச்சா இப்படி கொடும படுத்திருக்கானுவளே பாவிப்பயலுக." கோபத்துடன் ஒரு ஆண் குரல் ஒலிக்க, அதைத் தொடர்ந்து ஒரு

இளம்பெண்ணின் விசும்பலும் கேட்டது.

“இப்போ என்ன ஆச்சுன்னு இந்த குதி குதிக்கறீரு? ஒழுங்கா வேலை செய்யலைனா கண்டிக்கத் தான் செய்வாக... இது ஒரு தப்பா?” மணி எகிறினான.

“என்ன ஆச்சா?! எம்புள்ள கால அடிச்சு ஒடிச்சு... கைய கொதிக்கிற வெண்ணிக்குள்ள முக்கி இம்ச பண்ணிருக்கானுவ... அது மட்டுமா? வெளியில சொல்லமுடியாத கொடுமையெல்லாம் அனுபவிச்சிருக்குய்யா எம்புள்ள... எங்கெங்க சூட்டுத் தழும்பு இருக்கு தெரியுமா? ஆஸ்பத்திரிக்குக் கூட கூட்டி போகலியே நாசமா போறவனுங்க... இப்போ கால ஒன்னுஞ்செய்ய முடியாதுன்னு தெரிஞ்சதும் வெரட்டி விட்டுட்டானுங்க...” பெரியவரின் குரல் தழுதழுக்க, அந்தப் பெண்ணின் கேவல் இன்னும் அதிகமாக ஒலித்தது.

“இதெல்லாம் எதுக்கு? வேல செய்யாததுக்கா? இருவது மணிநேரம் உழைச்சு ஓடா தேஞ்சு, சாப்பாடு கிடைக்காத ஆதங்கத்துல பசிக்குதுன்னு சொன்ன ஒரே காரணத்துக்காக இப்படி செஞ்சிருக்கானுங்க... டிரைனிங்குன்னு ஏய்ச்சு, பேசுன சம்பளம் கொடுக்கறதில்லை... எங்களப் பார்க்க பேச விடறதில்ல, கொத்தடிம மாதிரி நடத்தி இப்போ என் புள்ளைய முடமாக்கிடானுங்களே...”

“மில்லுகாரங்கள கேட்டா உம் பொண்ணு நடத்த சரியில்லன்னு சொல்றாங்க. கேசு போடாம விட்டதே பெரிய விசயம்” என்றான் மணி அலட்சியமாக.

"பொய்கார பாவிக... எம்பொண்ணு தங்கம்யா... இவனுங்களுக்கெல்லாம் நல்ல சாவே வராது...”

"அனாவசியமா பேசாத... இதுல இரண்டாயிரம் இருக்கு... எடுத்துட்டு கிளம்பு"

அதற்கு மேல் மணியிடம் எந்தப் பேச்சும் எடுபடாமல் போக, சற்று நேரத்தில் கையாலாகாத்தனத்துடன், வெளிவந்த பெரியவரின் கையில் வெள்ளைக் கவர்.

அவர் பின்னால், ஒட்டிப்போன கன்னங்களும், பஞ்சடைந்த கண்களும், ஜீவனேயில்லாத முகமுமாக, வெந்துபோன வலக்கையுடன், கட்டைகள் உதவியுடன் நொண்டியபடி, வெளிவந்த பெண் பார்த்த பார்வையில் கண்கள் மட்டுமல்ல, இருதயமும் கலங்கியது லட்சுமிக்கு. குற்ற நெஞ்சுடன் கூனிக் குறுகிப் போனாள்.

கோபத்துடன் வீட்டில் நுழைந்து சண்டையிட்டவளை சட்டையே செய்யாமல், மீண்டும் ஐந்து சிறுமிகளை அதே பஞ்சாலையில் கொத்தடிமைகளாக மாற்ற கோவைக்குக் கிளம்பினான் மணி.

குமுறிக்கொண்டிருந்த லட்சுமியின் மனதில் காதலுக்கும், தர்மத்திற்கும் யுத்தம் நடைபெற, இறுதியில் வென்ற முடிவு, அவள் வாழ்வின் திருப்புமுனை.

சற்று முன் கண்ட குழந்தை தொழிலாளர் பற்றிய வீதி நாடகம் நினைவிலாட, லட்சுமியின் கைகள் பத்து ஒன்பது எட்டு (1098) என்ற சைல்டு லைன் (childline) இலக்கத்தை தொலைபேசியில் அழுத்தின.

மாலை செய்திகளில் மணி கைதான விஷயம் ஒளிபரப்பானபோது, கேட்பதற்கு லட்சுமி வீட்டில் இல்லை. அவலங்கள் நிறைந்த உலகை சந்திக்க விருப்பமில்லாத அவள் மகவும் கருவிலில்லை.

கணவனும், கருவறைக் குழந்தையும் கைநழுவிப் போனாலும், உழைப்பில் கருகிய இளங்குருத்துகளின் மறுமலர்ச்சி சேவையில் தன்னை இணைத்துக் கொண்ட லட்சுமி, இனி பெறாத பல குழந்தைகளுக்கு அன்னை.

தொடர்கதை...

நித்தமும் உன் சிந்தனையே...

- கோமதி அருண் (கோம்ஸ்)

லாவண்யா அதிர்ச்சியுடன்,"சார்!!!!" என்று அழைத்ததும் தியாகேஷ்வர் மென்னகையுடன்,"நீ என்ன சொல்ற தினேஷ்?"

“இ.. இதில் நான் என்ன சார் சொல்றது?"

"லாவண்யா உன் பெஸ்ட் பிரெண்ட்.. அதான் உன்னிடம் ஒபினியன் கேட்கிறேன்".

"உங்க விரு..(லாவண்யாவைப் பார்த்தவன் பார்வையைத் தாழ்த்தி)..ப்பம் போல் செய்ங்க சார்".

லாவண்யா அமைதியாக இருக்க, தியாகேஷ்வர் இருவரையும் ஒரு நொடி பார்த்துவிட்டு சாலையில் கவனத்தை செலுத்தியபடி சிறு புன்னகையுடன், "ஹ்ம்ம்.. யோசிச்சு சொல்றேன்" என்றான்.

தினேஷ் இனம் புரியாத சிறு வலியுடன் சாலையை வெறித்தான். தினேஷை வெறுப்பேத்துவதற்காக பேசத் தொடங்கியவள் தியாகேஷ்வரின் பேச்சினால் தனது நெஞ்சினோரம் இனம் புரியாத சிறு வலி பிறப்பதை உணர்ந்து மறுபக்கச் சாலையை வெறித்தாள்.

ரேஷ்மாவிடம் சற்று அசைவு தெரியவும் தியாகேஷ்வர் சாலையோரம் வண்டியை நிறுத்தி அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தான். பதறியபடி அவள் கண் விழிக்கவும் லாவண்யா அவள் அருகில் வந்து அவளது தோள்களை ஆதரவாக பற்றிக்கொள்ள, தியாகேஷ்வர், "ரிலாக்ஸ்.. ரேஷ்மா.. ரிலாக்ஸ்.. யூ ஆர் சேஃப் நவ்".
மெல்ல பயம் தெளிந்து, கைபேசியில் மருத்துவரிடம் அவள் தெளிவாகப் பேசத் தொடங்கியதும் தியாகேஷ்வர் வண்டியை கிளப்பினான். அடுத்த பத்தாவது நிமிடம் வண்டி ஒரு பிரபல மருத்துவமனையின் முன் நின்றது.

வண்டி நின்றதும் ரேஷ்மா ஓடிச் சென்று கண்ணீருடன் மருத்துவமனை வாயிலில் சிறு பதற்றமும், எதிர்பார்ப்பும், மகிழ்ச்சியுமாக நின்றிருந்த தந்தையைத் தழுவிக்கொள்ள அவரும் கண்ணீருடன் மகளை தழுவிக்கொண்டார்.

தினேஷை மருத்துவமனையினுள் லாவண்யா அழைத்துச் செல்ல, தியாகேஷ்வர் மருத்துவர் அருகே நின்றான்.

மருத்துவர் மன நிறைவுடன் தியாகேஷ்வருக்கு நன்றி கூற, அவன் மென்னகையுடன் அதைப் பெற்றுக் கொண்டு,
"சில பார்மாலிட்டீஸ் முடிக்க நாளைக்கு காலைல நீங்க ரெண்டு பேரும் ஸ்டேஷன் வர வேண்டியது இருக்கும்".

"ஷ்யூர் சார்".

தியாகேஷ்வர் சுற்றுப்புறத்தை நோட்டமிட்டுவிட்டு, "யார் இதை செஞ்சுருப்பாங்கன்னு நினைக்கறீங்க?"

"அக்யூஸ்ட் சொல்லலையா சார்?"
"நான் உங்க சந்தேகத்தைக் கேட்டேன்".
“தெரியலை சார்.. நானும் யோசிச்சுப் பார்த்தேன் பட்..." என்று அவர் உதட்டை சுளித்தார்.
"நீங்க என்ன நினைக்கிறீங்க ரேஷ்மா?"

"தெரியலை சார்.. பட் சுபா இறக்கறதுக்கு

முந்தின நாள் போன்ல பேசினப்ப ரொம்ப ரெஸ்ட்லஸ்ஸா இருந்தா".

"நீங்க காரணம் கேட்கலையா?"

"கேட்டேன் சார், அவ(ள்) 'ஒரு நாள் உங்க வீட்டுக்கு வரேன்.. அப்போ பேசிக்கலாம்'னு சொன்னா".

அவன் மருத்துவரைப் பார்த்து, "மிஸ்டர் JPக்கு எதிரிங்க யாரும் இருக்காங்களா?"

"அப்படி யாரும் எனக்குத் தெரிஞ்சு இல்லை சார்".

"ஆல்ரைட்.. மேலும் ஏதும் விவரம் வேணும்னா கேட்கிறேன்.. இப்போ நீங்க கிளம்பலாம்.. நாளைக்கு காலைல ஸ்டேஷன்ல பார்க்கலாம்" என்று கூறியபடி மருத்துவருடன் கைக்குலுக்கியவன் ரேஷ்மாவை நோக்கி, "கொஞ்ச நாள் எங்கேயும் தனியா வெளிய போகாதீங்க.. பி கேர்புல்".

"ஷ்யூர்.. தேங்க் யூ வெரி மச் சார்".

சிறு புன்னகையுடன் தியாகேஷ்வர் விடை பெற, மகளை அழைத்துக்கொண்டு கிளம்பிய மருத்துவர் சட்டென்று நின்று திரும்பி, "சார்" என்று அழைத்தார்.

தியாகேஷ்வர் திரும்பிப் பார்க்கவும் அருகே வந்தவர், "மிஸ்டர் JP இறந்த டைம்ல அவருக்கு கொஞ்சம் பிபி அதிகமா இருந்தது.. காரணம் கேட்ட போது பார்ட்னர் கூட சின்ன பிரச்சனைன்னு சொன்னார்".

"JP சாருக்கு பார்ட்னரா?"

"ஹ்ம்ம்.. நிறைய பேருக்குத் தெரியாது.. அவர் ஸ்லீபிங் பார்ட்னர்".

"ஓ! யாரு?"
"மிஸ்டர் கௌரிநாதன்.. அவர் கடைக்கு எப்பவாது தான் வருவார்.. சொந்தமா ரியல் எஸ்டேட் பிசினஸ் பண்றார். அவர் வீடு டவுன் **** தெருல இருக்குது".
"ஹ்ம்ம்.. தேங்க் யூ டாக்டர்.." என்று கூறி விடை பெற்ற தியாகேஷ்வர் மருத்துவமனையினுள்ளே செல்லவும், தினேஷும் லாவண்யாவும் வந்தனர்.

தியாகேஷ்வர், "அதுக்குள்ள ட்ரீட்மென்ட் முடிஞ்சுதா?"

தினேஷ் புன்னகையுடன், "பேஷன்ட் யாரும் இல்லாம ஈ ஓட்டிட்டு இருந்துருப்பார் போல".

லாவண்யா அவனை முறைக்கவும், தியாகேஷ்வர் தினேஷைப் பார்த்து 'என்ன?' என்பது போல் புருவம் உயர்த்தினான்.

தினேஷ் அலட்டிக் கொள்ளாமல், "டாக்டர் ஏதோ இவளுக்கு தெரிஞ்சவராம்.. இவளைப் பத்தி தெரிஞ்சவராச்சே! அதான் இவளுக்கு பயந்தே போனதும் உள்ள கூப்பிட்டு நாலு தையல் போட்டு அனுப்பிட்டார்".

லாவண்யா கோபத்துடன், "உனக்குப் போய் ஹெல்ப் பண்ணேன் பார்! நீ திருந்தவே மாட்ட" என்று கூறிவிட்டு வெளியே சென்றாள்.

தியாகேஷ்வர் புன்னகையுடன் தலையை அசைக்க, தினேஷ் சிறிது அசடு வழிந்தான்.

மீண்டும் பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த கீர்தன்யா அறைக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டு மணியைப் பார்த்தாள்.

அவள் எரிச்சலுடன், "எனக்கு சாப்பாடு வேண்டா(ம்)மா" என்று கூற,

"எனக்கு பசிக்குதுடா.. உன்னை விட்டுட்டு சாப்பிட மனசு வரலை.. கொஞ்சம் சாப்பிட வாடா.." என்று சாந்தியின் குரல் கேட்கவும், வேறுவழியின்றி தனது எரிச்சலையும் கோபத்தையும் மறைத்துக்கொண்டு கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

சாந்தி சிறு புன்னகையுடன் அவளது தோள்களை மென்மையாகப் பற்றி அழைத்துச் செல்ல, அவள் அமைதியாக உணவறைக்குச் சென்றமர்ந்தாள்.

யார் முகத்தையும் பார்க்காமல் உண்டேன் என்ற பெயருக்கு உணவை சிறிது கொறித்துவிட்டு அவள் எழுந்து கொள்ள, சாந்தி, "இன்னொரு இட்லி சாப்.." அவர் முகத்தை பார்க்காமல், "எனக்கு போதும் அத்தை.. இப்போ நீங்க நிம்மதியா சாப்பிடுங்க" என்று கூறி கைகழுவி விட்டு தன் அறையை நோக்கி செல்ல, அவள் முன் அவசரமாக சேகர் நின்றான்.

அவள் நிமிர்ந்து பார்க்கவும், அவன், "எனக்கு உன்னிடம் கொஞ்சம் பேசணும் கீர்த்தி".

"நான் தூங்கனும்".

"ஜஸ்ட் ஃபைவ் மினிட்ஸ்" என்று அவன் கெஞ்ச, இதே வார்த்தைகளைக் கூறி அவளைக்

கல்லூரிக்கு அவன் அழைத்துச் சென்றது ஞாபகத்திற்கு வரவும் அவள் அவனைக் கடுமையாக முறைத்து, பல்லைக் கடித்துக் கொண்டு,
"இனி என்னிடம் இந்த வார்த்தைகளை எப்போதும் சொல்லாத" என்றாள்.

அவளது கோபத்திற்கான அர்த்தம் புரியாமலேயே அவன் சரி என்பது போல் தலையை ஆட்டினான்.

"வழியை விடு".

"ப்ளீஸ் கீர்த்தி எனக்குக் கொஞ்சம் பேசணும்".

அவள் எரிச்சலும் கோபமுமாக அவனைப் பார்க்க, அவன் அவசரமாக, "எனக்குத் தெரியும் கீர்த்தி, நீ எதையோ மனசுக்குள் வச்சுக்கிட்டு ரொம்ப கஷ்டப்படற".

அவள் புரியாமல் அவனைப் பார்க்கவும், அவன், "உனக்கும் அந்த போலீஸுக்கும் என்ன பிரச்சனை?"

சட்டென்று நிமிர்ந்தவள், நொடி பொழுதில் அதிர்ச்சியை மறைத்துக்கொண்டு அறியாதவள் போல், "எந்த போலீஸ்?"

"இன்னைக்குக் காலைல உன் காலேஜ் கேன்டீன்ல பார்த்தவரைச் சொல்றேன்".

"அவர் போலீஸா?"

"கீர்த்தி ப்ளீஸ்.. ஏன் உனக்குள்ளே இப்படி கஷ்டப்படற.. நான் உன் பிரெண்ட்.."

அவள் சட்டென்று அவனை முறைக்கவும், அவன் முகத்தைத் தாழ்த்தி சிறு குரலில், "அது.. நண்பன் கணவனாவதில் தப்பில்லையே.. உனக்காக.."

"என்னைப் பொறுத்தவரை கணவன் நண்பனாக இருக்கலாம். ஆனால் நண்பன் கணவனாக முடியாது" என்று கடுமையான குரலில் கூறிவிட்டு, அவனை சுற்றிக்கொண்டு அறையினுள் சென்று கதவை மூடிக் கொண்டவளை மீண்டும் பழைய நினைவுகள் தாக்கியது.

வண்டியில் செல்லும் போது தியாகேஷ்வர் மருத்துவர் கூறியதைக் கூற, தினேஷ், "சார்.. சந்தீப் மாமனார் பெயர் கூட கௌரிநாதன் தான்".
"ஹ்ம்ம்.. எனக்கும் அதே சந்தேகம் தான்.. நாளைக்குப் பார்க்கலாம்."

லாவண்யா, "அப்போ குற்றவாளியை நெருங்கிட்டோமா சார்?"

"பார்க்கலாம்.. நாளைக்கு நீங்க மிஸ்டர் கௌரிநாதன் வீட்டுக்குப் போங்க.. நான் மிஸ்டர் JP வீட்டுக்குப் போறேன்".

லாவண்யா, "அங்க எதுக்கு சார்?"

"மிசஸ் JP கிட்ட சில கேள்விகள் கேட்கணும்".

தினேஷ், "சுபாஷினி மெடிக்கல் ரிப்போர்ட்ஸ் பத்தியா சார்?"

"ஹ்ம்ம்" என்று கூறியவன் யோசனையில் இருக்கவும், லாவண்யா, "என்ன சார் யோசிக்கிறீங்க?"

தியாகேஷ்வர் புன்னகையுடன் சிறிது தலையை அசைக்கவும், தினேஷ், "வேற யாரெல்லாம் உங்க லிஸ்ட்ல இருக்காங்க சார்?"

லாவண்யா, "லிஸ்ட்டா?"

தினேஷ் சிறு புன்னகையுடன், "சார் மைண்டுல தனி லிஸ்ட் இருக்கும்" என்று கூறிவிட்டு தியாகேஷ்வரைப் பார்க்க, அவன், "சொத்துக்களின் கார்டியன் மிஸ்டர் ப்ரதாப் அண்ட் அவர் தம்பி மிஸ்டர் விஜயன்".

லாவண்யா யோசனையுடன் அவனைப் பார்க்க, அவன், "நாளைக்கு நமக்கு நிறைய வேலைகள் இருக்குது லாவண்யா" என்றான்.
தினேஷ், "சார் நாளைக்கு மிஸ்டர் கௌரிநாதனைப் பார்க்க நானும் போறேன்".
தியாகேஷ்வர் பதில் கூறும் முன் லாவண்யா அடக்கிய கோபத்துடன் "யாரும் எனக்குத் துணையா தேவை இல்லை சார்.. ஒழுங்கா வீட்டுல உட்கார்ந்து ரெஸ்ட் எடுக்கச் சொல்லுங்க" என்றாள்.

அவளது அக்கறை மனதிற்கு இனிதாக இருந்தாலும் வெளியே, "இங்க யாரும் யாருக்கும் துணையா போக ஆசை படலைன்னு சொல்லுங்க சார்.. அவர் தான் சந்தீப் மாமனாரான்னு கன்ஃபர்ம் பண்ணத் தான் நான் போறேன்னு சொன்னேன்".

அவனது முதல் வாக்கியத்தில் அவளது மனம் வலிக்க, காரணம் புரியாமல் அவனைக் கோபமாகப் பார்த்தாள். அவன் அலட்சியமாக தோளைக் குலுக்கிவிட்டு வலியில் 'ஸ்ஸ்' என்று முகம் சுளிக்க, உடனே பதறியவள் நொடிப் பொழுதில் அதை மறைத்து, கோபமாக, "நான் விசாரிச்சுட்டு இருக்கும் போது நடுவுல இவன்

'ஸ்ஸ்'-னு சத்தம் போட்டு என்னை டிஸ்டர்ப் பண்ண கூடாதுன்னு தான் வீட்டில் இருக்கச் சொன்னேன் சார்".

இவர்களின் சண்டையைப் பார்த்து அவர்கள் மனதைப் புரிந்துக் கொண்ட தியாகேஷ்வர் புன்னகையுடன், "நாளைக்கு ஒரு நாள் ரெஸ்ட் எடுத்துக்கோ தினேஷ்".

"இதெல்லாம் காயமே இல்லை சார்.. சின்ன காயத்துக்கு பயந்து லீவ் போடுறதுக்கு நான் ஒன்னும் பொண்ணு இல்லை சார்".

"காயமே இல்லைன்னா டாக்டர் தையல் போட்டப்ப ஏன் உன் முகம் அஷ்ட கோணலாக மாறியது".

"ஹ்ம்ம்.. தற்செயலா திரும்பினப்ப உன் முகத்தைப் பார்த்தேன் அதான் அப்படி சுளிச்சுருப்பேன்".

மனதினுள் எழும் வலியை மறைத்துக்கொண்டு அவள் பல்லைக் கடித்துக்கொண்டு அவனை முறைத்தாள்.

தியாகேஷ்வர், "உங்க சண்டையை நாளைக்குப் போட்டுக்கோங்க.. இப்ப நீ கீழ இறங்கு தினேஷ்".

"ஓ! வீடு வந்துருச்சா.. தேங்க் யூ சார்" என்று கூறி கீழே இறங்கியவன், கதவை மூடும் தருணத்தில் ஒரு நொடி அவளைப் பார்த்தான். நொடிப் பொழுதில் அவள் கண்ணிலிருந்து சிறு தவிப்பு மறைந்தது போல் அவனுக்குத் தோன்ற, அவனையும் அறியாமல் அவளிடம் சிறு தலையசைப்புடன் அவன் விடை பெற, அவளும் தன்னையும் அறியாமல் தலையசைத்து விடை கொடுத்தாள்.

யாரை இனி தன் வாழ்வில் பார்க்கவே கூடாது என்று கீர்தன்யா எண்ணியிருந்தாளோ அவனை இன்று பார்த்து விட்ட கோபமும் எரிச்சலும், அந்த சந்திப்பிற்குக் காரணமான சேகர் மீது திரும்பியது. இலஞ்சியை விட்டு கிளம்பத் துடித்தவள் இரவு நேரத்தில் தன்னை கிளம்ப விடமாட்டார்கள் என்பதால் வேறுவழியின்றி இயலாமையுடன் அமைதியாக இருந்தாள். ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்ற, வெகு சிரமத்துடன் இரவைக் கழிக்கத் தொடங்கினாள்.

லாவண்யாவை வீட்டில் விட்டுவிட்டு தன் வீட்டிற்கு வந்த தியாகேஷ்வருக்கு வழக்கம் போல் நித்தமும் அவன் சிந்தனையில் இருப்பவளின் ஞாபகம் வந்தது.

"தயா.. ரெண்டு வருஷத்துல எப்படி இளச்சுட்ட! கண்ணில் முன்பு இருந்த குறும்பு, துடிப்பு சிறிதும் இல்லையே! என் மேல் எவ்வளவு கோபம்! ஆனா உண்மை தெரியும் போது என்ன சொல்லுவ? அப்பவாவது என்னை, என் காதலை ஏத்துப்பியா?" என்று அவனது மனம் ஏங்கியது.

உடையை மாற்றக் கூட தோன்றாமல் படுக்கையில் விழுந்தவனின் மனம் அவள் நினைவுகளில் விழுந்தது.

மொட்டை மாடியில் மூன்றாவது முறையாக சந்தித்த அன்று நண்பனிடம் அவளைப் பற்றிய விவரங்களை கேட்ட பிறகே வீட்டிற்குக் கிளம்பினான்.

வார இறுதிக்காக அவன் காத்திருக்க, ஒரு நாள் மாலை 7.45 மணியளவில் பேருந்து நிறுத்தத்தில் எதிர்பாராத விதமாக அவளைப் பார்த்தான். காக்கி உடையின்றி சாதாரண ஆடையில் அவன் காரில் தன் வீட்டிற்கு சென்றுக் கொண்டிருந்த போது ஒரு பேருந்து நிறுத்தத்தில் அவள் சிறு பதற்றத்துடன் அந்த சிறுவனை இறுக்கமாக பற்றிக்கொண்டு நிற்க, அவள் அருகில் மூன்று இளைஞர்கள் சிரித்தபடி ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அவன் மனதினுள் நிலைமை ஏதோ சரியில்லை என்று தோன்றவும் வண்டியை நிறுத்தி கீழே இறங்கிச் சென்றான்.

அந்த சிறுவன், "எங்களுக்குத் தெரியும்.. நீங்க உங்க வேலையை பார்த்துட்டுப் போங்க" என்று கோபமாகக் கூற, அவள், "ஷ்.. நீ எதுவும் பேசாத" என்று கூற, இளைஞர்கள் நக்கலாக சிரித்தனர்.

"பாருடா பொடியனுக்கு ரோஷத்தை" என்றபடி ஒருவன் சிறுவனின் கன்னத்தை வருட, சிறுவன் அவன் கையை எரிச்சலுடன் தட்டிவிட்டான்.

தியாகேஷ்வரைக் கண்டதும் அவள் கண்களில் சிறு அலுப்பு தோன்றி மறைந்தாலும் முன்பு இருந்த பதற்றம் மறைவதை உணர்ந்தவன், அவள் அருகில் இயல்பாகச் சென்று, "சாரிம்மா.. கொஞ்சம் லேட் ஆகிருச்சு" என்றான்.

தியாகேஷ்வர் இயல்பாகப் பேசியதும் விலகத் தொடங்கியவர்கள் அவள் முகத்தில் எதைக் கண்டனரோ, விலகாமல் நின்றனர். ஒருவன், "மச்சி.. பட்சி முகத்தைப் பார்த்தா அவனை யாருன்னு தெரியாதுன்னு நினைக்கிறேன்".

மற்றொருவன் குரலை சற்று உயர்த்தி, "ஒரு பொண்ணு அழகா இருந்தா போதுமே.. தெரிஞ்ச மாதிரி வந்து பேசுவீங்களே.. இந்த சீன்லாம்

எங்க ஏரியால செல்லுபடி ஆகாது தம்பி.. கிளம்பு கிளம்பு.." என்றபடி தியாகேஷ்வரின் தோளைத் தட்டினான்.

தியாகேஷ்வர் அவனைப் பொருட்படுத்தாமல் அவளைத் தீர்க்கமாகப் பார்த்தான். அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்துக்கொண்டிருக்க, முதலில் பேசியவன் தெனாவெட்டாக, "அதான் கிளம்புன்னு சொல்றோம்ல.. இன்னும் என்ன லுக்கு.. கிளம்புடா" என்றான்.

தியாகேஷ்வர் அவளைப் பார்த்துக்கொண்டே, "சந்துரு அக்காவ கூட்டிட்டுப் போய் கார்ல உட்காரு" என்று கூற அவளும் (வேற யாரும் இல்லை நம்ம கீர்தன்யா தான்) சிறுவனும் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

இளைஞர்களில் ஒருவன் அவர்களுக்குள், "மச்சி உண்மையிலேயே தெரிந்தவனோ!" என்று சந்தேகத்துடன் கேட்க, இன்னொருவன், "சும்மா இருடா.. பட்சி யோசிக்கறதை பார்த்தா அவர்களுக்குள் ஏதோ பிரச்சனைன்னு நினைக்கிறேன்" என்றவன்,
"இவன் கிடக்கிறான்.. நீ வா செல்லம்.. நம்ம வீட்டுக்குப் போகலாம்" என்றபடி அவள் கையைப் பிடிக்க முயற்சிக்க, அவள் அவசரமாக தியாகேஷ்வர் அருகே நகர்ந்தாள்.
தியாகேஷ்வர் அவளைப் பார்த்து குரலை சற்று உயர்த்தி, "சந்துரு அக்காவ கூட்டிட்டு போன்னு சொன்னேன்" என்று கூற, அவள் தம்பியை அழைத்துக்கொண்டு, இரண்டடி தள்ளி நின்ற தியாகேஷ்வர் காரினுள் ஏறினாள்.

தியாகேஷ்வர் தனது அடையாள அட்டையை அந்த இளைஞர்களிடம் காட்டி அவர்களை இரண்டு தட்டு தட்டி அனுப்பிவிட்டு காரின் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்து பின் பக்கம் திரும்பி அவளைப் பார்த்து உணர்ச்சியற்ற குரலில்,
"தெரியாத பொறுக்கியை விட தெரிந்த பொறுக்கி பெட்டர்னு என் காரில் ஏறுனதுக்கு நன்றி".

அவள் முறைப்புடன், "உங்களைப் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது" என்று கூற, அவளது கோபமான முகத்தைப் பார்த்து சிறுவன், "இறங்குக்கா.. ஆட்டோல வீட்டுக்கே போய்டலாம்".

"என்னைப் பற்றி தெரியாது ஓகே.. பட் உங்க பக்கத்து வீட்டு ஹரிஷ் தெரியும் தானே.. நான் அவன் நண்பன்.. நான்.."

"உங்களைப் பற்றிய விவரங்கள் எனக்குத் தேவை இல்லை.. எனக்கு உதவி செய்ததற்கு நன்றி" என்று கூறியபடி அவள் கதவைத் திறக்க, அவன்,

"ஒரு நிமிஷம் கீர்தன்யா.. அந்தப் பசங்க இங்க தான் சுத்திட்டு இருப்பாங்க.. ஸோ இப்போ நீங்க தனியா போறது சே்ப் இல்லை".

அவன் அவர்களை மிரட்டியது அறியாதவள், அவன் சொல்வது சரி என்று நினைத்து சிறிது திறந்த கதவைப் பிடித்தபடி செய்வதறியாது உதட்டை கடித்தபடி அமைதியாக இருக்க,

அவன், "இ்ப் யூ டோன்ட் மைண்ட், நீங்க எங்க போகணும்னு சொன்னா நான் ட்ராப் பண்றேன்".

அவள் தயக்கத்துடன், "கo மினிட்ஸ் வெயிட் பண்ண முடியுமா?"

“பண்றேன்.. எதுக்குன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"பிரெண்ட் வரேன்னு சொல்லியிருக்கா".

"ஓ!" என்றதற்கு மேல் வேறேதும் பேசாமல் முன்பக்கம் திரும்பினான்.

இருவரும் பேசாமல் அமைதியாக இருக்க சந்துரு மட்டும் செய்கையில் 'கிளம்பலாம்' என்பது போல் கூறிக் கொண்டிருந்தான்.
இவ்வளவு அருகில் இருந்தும் அவள் முகத்தை பார்க்க முடியாமல் இருப்பது கஷ்டமாக இருக்க, அவன் கீழே இறங்கி கைகளைக் கட்டிக்கொண்டு கதவில் சாய்ந்தபடி நின்றான்.
பதினைந்து நிமிடங்கள் கழிந்தும் அவளது தோழி வரவில்லை என்றதும் அவள் தோழியை கைபேசியில் அழைத்தாள்.
தோழி தன்னால் வர முடியவில்லை என்று கூறவும், "பிசாசு.. வரலைன்னு சொன்னவளை நச்சரிச்சு கிளம்ப வச்சுட்டு இப்ப கூலா நீ வரலைன்னா சொல்ற.. நீ மட்டும் என் கைல கிடைச்ச.." என்று கத்தியவள் அப்பொழுது தான் சூழ்நிலையை உணர்ந்தது குரலை வெகுவாகக் குறைத்து பல்லை கடித்துக்கொண்டு,
"இனி எங்கேயாவது கூப்பிடு.." என்று கூறிவிட்டு அழைப்பைத் துண்டித்தாள்.

சந்துரு அவள் கையை வருடியபடி, "விடுக்கா.. நாம வீட்டுக்குப் போகலாம்" என்று ஆறுதல் கூற, அவள் தம்பியைப் பார்த்து புன்னகைத்துவிட்டு, கீழே இறங்கி, தியாகேஷ்வரிடம், "தேங்க்ஸ் சார்.. நாங்க கிளம்புறோம்" என்றாள்.

"நீங்க பேசினதை வச்சு உங்க பிரெண்ட் வரலைன்னு நினைக்கிறேன்.. (அவள் முறைக்கவும்) நானா ஒட்டு கேட்கலைங்க.. நீங்க சத்தமா பேசினது அதுவா என் காதில்

விழுந்தது.. நான் கொஞ்சம் நல்லவன் தாங்க.. நம்பலாம்".

அவள் தீவிரமான முக பாவனையுடன், "கொஞ்சம் தான் நல்லவரா?"

அவன் சிறு புன்னகையுடன், "நானே என்னைப் பற்றி பெருமையா பேசினா நல்லா இருக்காதே".

"நல்லா இருந்தாலும் நான் நம்பணுமே!" அவன் உதட்டைப் பிதுக்கி, கைகளை விரித்து, "கஷ்டம் தான்".

"என்ன கஷ்டம்?" "ஒன்னுமில்லை".

அவள் ஏதோ கேட்க வர, சந்துரு, "அக்கா கிளம்பலாமா?" என்றான்.

அவள் சிறு புன்னகையுடன், "தேங்க்ஸ் சார்.. இனி நாங்களே பார்த்துக்கறோம்". "வீட்டுக்குத் தானே.. நான்.."

"பரவாயில்லை.. நாங்க ஆட்டோல போய்க்கறோம்".

"உங்க இஷ்டம்.. அட்லீஸ்ட் ஆட்டோ பிடிச்சி தரலாம் தானே?"

அவள் மறுக்கும் முன், அவன், "மணி 8.15, இந்த ஏரியா அவ்வளவா சரி கிடையாது.. நீங்க தனியா ஆட்டோ ஸ்டான்ட் வரை போறதோ.. ஆட்டோக்கு வெயிட் பண்றதோ உங்களுக்கு நல்லதில்லை".

அவள் தயங்கவும், அவன், "தயங்காதீங்க.. இது ஒரு சின்ன ஹெல்ப் தான்.. இதை வச்சு உங்க பின்னாடி சுத்துவேனோனு பயப்பட வேண்டாம்.. உங்க இடத்தில் வேற பொண்ணு இருந்தாலும் இதையே தான் செய்வேன்".

அவள் ஒரு மாதிரி பார்க்கவும் அவன், "வீட்டுல ட்ராப் பண்றேன்னு சொல்லியிருக்க மாட்டேன், பட் ஆட்டோ ஏத்தி விட்டிருப்பேன்".

"என்னை மாதிரி பொண்ணா இல்லாம வயசான பாட்டியா இருந்தாலும் இதைத் தான் செய்வீங்களா?"

அவன் உறுதியுடன்,"ஷ்யூர்" என்றான்.

அந்த நேரத்தில் அவர்களை நோக்கி ஒரு ஆட்டோ வரவும் அதை நிறுத்தி அவளை அனுப்பி வைத்தவன், நண்பனை அழைத்து விஷயத்தைக் கூறி அவள் வீடு வந்ததும் தன்னை அழைத்துக் கூறுமாறு சொன்னான்.

ஆட்டோ கிளம்பியதும், ஆட்டோவின் பின்புற சிறு ஜன்னல் வழியாக அவனைத் திரும்பிப் பார்த்தவள் அவளது கண்பார்வையிலிருந்து அவன் மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தாள்.

கீர்தன்யா வீடு வந்து சேர்ந்த தகவலை நண்பன் மூலம் அறிந்த பிறகே நிம்மதியாக உணர்ந்த தியாகேஷ்வர் இனிய கனவுகளுடன் உறங்கினான்.

அடுத்த இரண்டு வாரத்திற்கு வேலை பளு காரணமாக தியாகேஷ்வரால் கீர்தன்யாவை பார்க்கச் செல்ல முடியவில்லை. ஆனால் இந்த இரண்டு வாரங்களில் கீர்தன்யாவின் மனதினுள் அவனைப் பற்றிய நினைவுகள் வந்து போனது. மொட்டை மாடியில் சந்தித்த அன்று பார்த்த அவனது கம்பீரமான விரிந்த புன்னகை, இறுதியாக பேருந்து நிறுத்தத்தில் சந்தித்த போது அவனது கோபப்பேச்சு, அக்கறை, மென்னகை என்று அனைத்தும் அவள் சிந்தனையில் நீங்கா இடம் பிடித்தது. தியாகேஷ்வர் பற்றிய சிந்தனையைப் பொருட்படுத்தாமல் தன் வேலைகளில் கவனம் செலுத்த முயற்சித்தாலும் அவனைப் பற்றிய நினைவுகள் அவளை அலைக்கழித்தது. ஒரு நாள் ஹரிஷ் தியாகேஷ்வரை அழைத்த போது அவன் ஒரு முக்கியமான வேலையில் இருந்ததால் அழைப்பை எடுக்கவில்லை. அன்று இரவு வீட்டிற்கு வந்த பிறகு தியாகேஷ்வர் நண்பனை அழைத்தான்.

"ஹாய் தியாகேஷ்.. என்ன ரொம்ப பிஸியா?"

"முக்கியமான டிஸ்கஷன்ல இருந்தேன்".

"வாய்க்கா பாலம் வெட்டு குத்து கேஸா?"

"ஹ்ம்ம்.."

"ஜாதிக் கலவரத்தை தூண்டிவிட்டு கொலை பண்ணினது MLA சக்கரபாணி தானே?"

"விசாரிச்சுட்டு இருக்கோம்".

"ஒரு வார்த்தை சொல்ல மாட்டியே!".

தியாகேஷ்வர் புன்னகைத்து விட்டு, "அதை விடு.. நீ எதுக்கு போன் பண்ண?"

"வர ஃப்ரைடே அண்ணன் பொண்ணுக்கு தர்ட் பர்த்டே, உன்னை இன்வைட் பண்ணலாம்னு.."

"இந்த மாதிரி ஃபங்க்ஷனுக்கெல்லாம் நான் போறதில்லைடா". "ஃபங்க்ஷன் வீட்டுல

வச்சிருக்கிறதால் கூப்பிட்டேன்".

தியாகேஷ்வர் உற்சாகத்துடன், "ஃபங்க்ஷன் எத்தனை மணிக்கு?"
"அதான் நீ வரபோறதில்லையே அப்பறம்.."

"டேய்!" ஹரிஷ் புன்னகையுடன், "7.30க்கு".

"ஓகே டா" என்று கூறி அழைப்பைத் துண்டித்தான்.

வெள்ளி அன்று இரவு 8 மணிக்கு ஹரிஷ் வீட்டிற்குச் சென்றவன் நண்பனிடம் கேட்ட முதல் கேள்வி, "கீர்தன்யா வந்திருக்காளாடா?"

"கேக் வெட்டியாச்சான்னு கேட்காம.. ஹ்ம்ம்.. உனக்கு உன் காரியம்" என்று சிரித்தவன், "முதல் ஆளா வந்துட்டா.. இங்க தான் எங்கேயாவது இருப்பா.. பாரு" என்று கூறி நகர்ந்தான்.

வீட்டுத் தோட்டத்தில் விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். கீர்தன்யாவை கூட்டத்தினுள் தேடியவனுக்கு தோல்வியே கிடைத்தது. எரிச்சலுடன் கூட்டத்தை விட்டு நகர்ந்தவனின் கண்ணில் இருட்டில் யாரோ சுவரேறி குதிப்பது தெரியவும் அவசரமாக அங்கே நகர்ந்து, அந்த நபரின் கையைப் பிடித்து பின்புறமாக இழுத்து மடக்கினான்.

"ஆ!" என்று அந்த நபர் வலியில் கத்த, யாரோ தியாகேஷ்வர் தொடையை ஒரு கம்பால் அடித்து, "ஏய்! என் அக்காவை விடுடா" என்றனர்.

அந்தக் குரல் பரிட்சயமாக இருக்கவும் அந்த நபரை வெளிச்சதில் இழுத்துப் பார்த்தவன் அதிர்ந்தான். அவசரமாகக் கையை விட்டபடி, "சாரி கீர்தன்யா.. யாரோ திருடன்னு நினைச்சு.. ஐயாம் ரியலி வெரி சாரி" என்று பதறியவன், அவள் வலியில் முகத்தைச் சுளிக்கவும், "ரொம்ப வலிக்குதா?" என்று கரிசனத்துடன் கேட்டபடி அவள் கையைப் பிடிக்க முயற்சிக்க, முறைப்புடன் பின்னால் நகர்ந்தவள் கல் தடுக்கி கீழே விழப் போக, அவன் அவசரத்தில் அடி பட்ட கையைப் பற்றி அவளை நிமிர்த்த, அவள் மீண்டும் வலியில் கத்தினாள்.
அவன், "சாரி..சாரி" என்று கூற, இவனைத் தேடி வந்த ஹரிஷ், "இங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க?"
தியாகேஷ்வர் சங்கடத்துடன் நடந்ததைக் கூற, சந்துரு ரோஷத்துடன்,
"நாங்க ஒன்னும் திருடங்க இல்லை.. கி்ப்பிட் எடுத்துட்டு வர மறந்துட்டோம்.. லேட் ஆகிருச்சுன்னு இந்த வழியா எடுத்துட்டு வந்தோம்".

தியாகேஷ்வர் மனதினுள், 'நல்ல வழியைக் கண்டுபிடிச்சீங்க!' என்று நொந்து கொள்ள,

ஹரிஷ், "ரொம்ப வலிக்குதா கீர்த்தி?"

அவள் கையை தேய்த்தபடி, "இல்ல".

ஹரிஷ் சிறு புன்னகையுடன், "எங்க போனாலும் உன் போலீஸ் புத்தியை விடவே மாட்டியே!"

அவள் சிறு அதிர்ச்சியுடன், "நீங்க போலீஸா?"

தியாகேஷ்வர், "ஹ்ம்ம்.."

"ஓ!" என்று உணர்ச்சியற்ற குரலில் கூறியவள் சந்துருவை அழைத்துக்கொண்டு விழா கூடத்திற்குச் சென்றாள்.

அதன் பிறகு அவள் தியாகேஷ்வர் பக்கம் சிறிதும் திரும்பவில்லை. ஏதோ ஒரு சிந்தனையில் அமைதியாகவே இருந்தவள் விரைவாகவே கிளம்பிச் சென்றுவிட்டாள்.

'போலீஸான தன்னை பொறுக்கி என்று முதலில் தவறாக நினைத்ததில் இப்பொழுது குற்ற உணர்ச்சியில் தன்னை தவிர்க்கிறாள்' என்று நினைத்துக்கொண்டு அவளைத் தொந்தரவு செய்யாமல் அவள் அருகில் இருந்த மகிழ்ச்சியுடன் வீடு திரும்பியவன், இனிய கனவுகளுடன் உறங்க, உறக்கமின்றி தன்னுள் வெகுவாகக் குழம்பிக் கொண்டிருந்த கீர்தன்யா இறுதியாக எடுத்த முடிவு தியாகேஷ்வரிடம் இருந்து விலகி இருப்பது, அவனை பற்றி இனி சிந்திக்கவே கூடாது என்பது தான். ஆனால் அடுத்த நாளே இருவரும் சந்தித்தனர்.

இந்தியாவில் இருக்கும் 124 அறிவியல் மையங்களில் ஒன்றான திருநெல்வேலி கொக்கிரகுளத்தில் இருக்கும் அறிவியல் மையத்தில்(சயின்ஸ் சென்டர்) ஒரு வாரம் அறிவியல் கண்காட்சி நடைபெற இருந்தது. சட்டப்பேரவை உறுப்பினர் (MLA) சக்கரபாணி கண்காட்சியை துவக்கி வைக்க ஏற்பாடு செய்யபட்டிருந்தது. சட்டப்பேரவை உறுப்பினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை தியாகேஷ்வர் தான் பார்த்துக் கொண்டான்.

விழா தொடக்கத்தின் போது, சக்கரபாணி சிரித்தபடியே மெல்லிய குரலில் தியாகேஷ்வரிடம், "என்ன தம்பி ஜாதி கலவரம்னு கேஸை முடிக்காம இன்னும் இழுத்து அடிச்சுட்டு இருக்கீங்க போல".

தியாகேஷ்வரும் சிரித்தபடி, "அந்த கேஸ் விஷயமா கூடிய சீக்கிரம் உங்களை தேடி

வருவேன்".

சக்கரபாணி முகத்தில் ஒரு நொடி கோபம் தோன்றி மறைய மீண்டும் புன்னகையுடன் அவன் தோள் மீது கைபோட்டபடி, "இளம் ரத்தம்ல அதான் ரொம்ப தைரியமா பேசறீங்க.. ஆனா உங்க வீட்டில் இருக்குற எல்லோரும் இளம் ரத்தமில்லை தம்பி.. பார்த்து நடந்துக்கோங்க".

அவன் மென்னகையுடன் அவர் கையை எடுத்து விட்டபடி, "பார்க்கலாம் சார்" என்று கூறி நகர்ந்தான்.

அந்த விழாவிற்குச் செல்ல கீர்தன்யாவின் தோழி கார்த்திகாவின் தந்தைக்கு 5 அனுமதி சீட்டுக்கள் கிடைத்திருக்க, கீர்தன்யாவின் அறிவியல் ஆர்வம் அறிந்த கார்த்திகா தங்கள் குடும்பத்தினருடன் அவளையும் சந்துருவையும் அழைத்துச் சென்றாள்.

சற்று பரபரப்பாக துவங்கிய விழா சக்கரபாணி கிளம்பிச் சென்ற பிறகு அமைதியாக நடந்தேறியது.

சக்கரபாணி கிளம்பிய சிறிது நேரத்தில் தியாகேஷ்வர் பாதுகாப்பு பொறுப்பைத் தனக்கு கீழ் இருந்த அதிகாரியான தினேஷிடம் ஒப்படைத்துவிட்டு கிளம்பிய போது கீர்தன்யாவைப் பார்த்தவன் புன்னகையுடன் அவள் இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான்.

அறிவியல் மையத்தின் ஒரு பகுதியான பூங்காவில் சந்துரு முயல் குட்டிகள் பின்னால் ஓடி விளையாடிக் கொண்டிருக்க, சற்று தள்ளி கீர்தன்யா தோழியுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

கார்த்திகா உற்சாகத்துடன், "அப்போ உன் ஆள் போலீஸ்!" கீர்தன்யா முறைக்கவும் தோழி, "உனக்கு பிடிச்சுருக்கு தானே!"

கீர்தன்யாவை தன் முகத்திற்கு நேராக திருப்பிய கார்த்திகா, "உண்மையைச் சொல்லு.. நீ அவரை லவ் பண்ற தானே!" என்று கறாராகக் கேட்க, வலுக்கட்டாயமாக வேறுபுறம் திரும்பிய கீர்தன்யா, "எனக்கு போலீஸ் வேண்டாம்".
"லூசாடி நீ!"
“எனக்கு வேண்டாம்".
கார்த்திகா குரலை சற்று உயர்த்தி, "சினிமால மட்டும் ரசிக்கற!"

"சினிமாவும் வாழ்க்கையும் ஒன்றல்ல".

கார்த்திகா முறைக்கவும், அவள், "போலீஸ் வாழ்க்கை ரொம்ப ஆபத்தானது".

"போலீஸ்காரங்க யாரும் கல்யாணம் பண்ணிகறது இல்லையா?"

ஒரு நொடி கண்களை இறுக மூடித் திறந்தவள் கலங்கிய விழிகளுடன், "எனக்கு வேண்டாம்னா வேண்டாம்" என்று கூற, தோழி அவள் தோளை வருடி, "ரிலாக்ஸ் டா.. இனி இதைப் பற்றி நாம பேச வேண்டாம்" என்றாள்.

கண்களைத் துடைத்து புன்னகை புரிந்தவள், "ஹாய் கீர்தன்யா" என்ற தியாகேஷ்வர் குரல் அவள் பின்னால் கேட்டதும் இறுக்கமான முகபாவனையுடன் திரும்பினாள்.

"என்ன இந்த பக்கம்?"

அவள் வரவழைத்த எரிச்சலுடன், "காய் வாங்கிட்டு போக வந்தேன்".

"ஓ! வாங்கிட்டீங்களா?"

அவள் முறைத்துவிட்டு தோழியின் பக்கம் திரும்ப, தோழி 'அவர் இவர் தானா!' என்று பார்வையில் கேட்க இவளும் பார்வையில் 'ஆம்' என்றாள்.

தியாகேஷ்வர் ஏதோ கேட்க வர, கார்த்திகா, "ஹலோ சார்.. என்ன நக்கலா?"

அப்பொழுது தான் கார்த்திகாவை கவனித்த தியாகேஷ்வர் அவளைப் பார்த்து புருவம் உயர்த்த, கார்த்திகா, "பசங்க ஈவ்-டீசிங் பண்ணினா போலீஸ் கிட்ட போகலாம்.. போலீஸே ஈவ்-டீசிங் பண்ணினா?"

தியாகேஷ்வர், "என்ன இந்த பக்கம்னு கேட்டது ஈவ்-டீசிங்கா!"

"காரணம் தெரிஞ்சுட்டே கேட்டா வேற எப்படி சொல்றது?"

"இன்ஜினீயரிங் படிக்கறவங்களுக்கு இங்க என்ன வேலைன்னு காரணம் தெரியாம தான் கேட்டேன்".

கார்த்திகா ஆச்சரியத்துடன் அவனைப் பார்க்க, அவன் மென்னகையுடன் புருவம் உயர்த்தினான். சட்டென்று சுதாரித்த கார்த்திகா சிறு பதற்றத்துடன்,
"இந்த கதையெல்லாம் வேண்டாம்.. இவ(ள்) யாரு தெரியுமா?"

அவன் கண்களை சிறிது சுருக்கி அவளைப் பார்த்துவிட்டு கீர்தன்யாவை பார்த்தான். அவளோ இவர்கள் பேச்சிற்கும் தனக்கும்

சம்பந்தம் இல்லாதது போல் சந்துருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது பார்வை தம்பியிடம் இருந்தாலும் கவனம் இவர்கள் பேச்சில் தான் இருக்கிறது என்பதை அறிந்த தியாகேஷ்வர் சிறு புன்னகையுடன் கார்த்திகா பக்கம் திரும்பி, "யாருங்க இவங்க?"

"அது.. அது.. இவ(ள்) ACPயோட லவ்வர்".

சிறு அதிர்ச்சியுடன் தலையை சிறிது உலுக்கி அவன் கீர்தன்யாவைப் பார்க்க, அவள் கோபமாக தோழியை முறைத்துக் கொண்டிருக்க, கார்த்திகாவோ அவள் முறைப்பை சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

தியாகேஷ்வர் பக்கம் திரும்பிய கார்த்திகா திணறலாக, "இவ யாருன்னு தெரிஞ்சுருச்சில்ல.. இனி இவ பின்னாடி சுத்தாதீங்க" என்று மிரட்ட முயற்சித்தாள்.

சிறு குழப்பத்துடன் இருவர் முகத்தையும் உன்னிப்பாக கவனித்த தியாகேஷ்வருக்கு அவர்களுக்கு தான் யாரென்பது தெரியவில்லை என்பதை புரிந்து கொண்டு, புன்னகையை மறைத்துக்கொண்டு கார்த்திகாவிடம், "ACP.தியாகேஷ்வர் சார் தான் கல்யாணமாகாதவர்.. அவர் லவ்வரா இவங்க?"

தோழியின் முறைப்பைப் பார்த்த கார்த்திகா, "ஆ..மா.. அவர்.. தான்".

அவன் புன்னகைக்கவும் தோழிகள் இருவரும் குழப்பத்துடன் அவனைப் பார்த்தனர்.

சிறிது இருட்டத் துவங்கியிருக்க, அக்கம் பக்கம் சுத்திப் பார்த்தவன், அவர்கள் மரத்தின் மறைவில் இருப்பதை உறுதி செய்து கொண்டு காதல் பார்வையுடன் கீர்தன்யாவை நெருங்க, அவன் பார்வையின் தாக்கத்தைத் தாங்க முடியாமல் அவள் திணறியபடி பின்னால் நகர, கல் பெஞ்சில் கால் தட்டி அமர்ந்தாள்.

கார்த்திகா செய்வதறியாது நடப்பதை பார்த்துக்கொண்டிருக்க, கீர்தன்யா படபடத்த இதயத்துடன் தன் உணர்ச்சிகளுடன் போராடியபடி அவனை மிரட்ட நினைக்க, அவள் இதழ்களோ பசை போட்டது போல் திறக்க மறுத்தன.

அவளது தவிப்பை மென்னகையுடன் ரசித்த தியாகேஷ்வர் அவள் முகத்தருகே குனிந்து, "நான் மட்டும் தான் உன்னை காதலிச்சுட்டு இருந்தேன்னு நினைச்சேன்" என்று சிறு இடைவெளிவிட்டு அவள் உணர்வுகளை ஆராய்ந்தான்.

அவள் அதிர்ச்சியுடன் அவனையேப் பார்த்துக் கொண்டிருக்கவும், அவன் விரிந்த புன்னகையுடன், "தயா ஐ லவ் யூ" என்று கூறி அவள் கன்னத்தை மெல்லிதாக தட்டுவிட்டு நிமிர்ந்தான்.

அவள் இவன் முகத்தையையே பார்த்தபடி சிலை போல் அமர்ந்திருக்க, முதலில் சுயஉணர்வு பெற்ற கார்த்திகா, குரலை சற்று உயர்த்தி, "என்ன சார்.. நான் இவ்வளவு சொல்.."

அவள் பேச்சைக் கையை உயர்த்தித் தடுத்தவன் அவனது காக்கி உடையில் இருந்த பெயரைச் சுட்டிக்காட்டினான்.

பெயரை வாசித்த கார்த்திகா அதிர்ச்சியுடன் வாயை திறந்தபடி நிற்க, கீர்தன்யா அதிர்ச்சியுடன் எழுந்து நின்றாள்.

சந்துரு அவர்கள் அருகே ஓடி வரவும் தியாகேஷ்வர் கீர்தன்யாவைப் பார்த்து புன்னகையுடன் கண்ணடித்து நகர்ந்தான்.

கீர்தன்யா அவசரமாக, "மிஸ்டர் நீங்களா ஏதும் கற்பனை செஞ்சுக்காதீங்க"

அவன் புன்னகையுடன் திரும்பி, "நான் ஏதும் கற்பனை செய்யலை.. உன் பிரெண்ட் இப்போ.."

"அவள் ஏதும் உளறினா அதுக்கு நான் பொறுப்பில்லை".

தியாகேஷ்வர் புன்னகைத்துவிட்டு நகர, அவள் கோபத்துடன் தரையை உதைத்தாள்.

சந்துரு, "என்னாச்சுக்கா?" என்று வினவ, அவள் கோபமாக தோழியின் பக்கம் திரும்பினாள்.

இவளது காளி அவதாரத்தைப் பார்த்த கார்த்திகா பின்னால் நகர்ந்தபடி, "நான் உனக்கு நல்லது செய்ய தான் நினைச்சேன்.. இவரை விட பெரிய அதிகாரியை இழுத்தா இவர் அமைதியா போய்டுவார்னு.."

அவள் கோபமாக இவள் அருகே வரவும், "ஹே.. நீயே யோசிச்சு பாரு.. அவர் ACPன்னு எனக்கெப்படி தெரியும்?"

அவள் கார்த்திகாவை சரமாரியாக அடிக்கத் தொடங்கவும், சந்துரு புரியாமல் முழித்துக் கொண்டு நின்றிருந்தான்.

சிந்தனை தொடரும்...

பெண்மை கவிக்குயில்கள்

Gowrymohan

நிலமங்கை காத்திருக்கிறாள்...
பருவகாலத்தில் வரும்
ஆருயிர் கணவன் வரவில்லை
பசியாற்ற வழியேது...?

இருந்த உணவும் முடிகிறது
குழந்தைகளோ
வாடி, வதங்கி, பசியுடன், தலைகுனிந்து
தாயைப் பார்க்கின்றனர்.

வேதனையில் மேனி வெடித்து
நிறம் மாறி ஏக்கத்துடன்
வானத்தைப் பார்த்திருக்கிறாள்
நிலமங்கை.

திடீரென வந்தது மின் அஞ்சல்
"வந்து கொண்டிருக்கிறேன் கண்ணே
கவலை வேண்டாம்"
ஆவலுடன் பார்த்தபோது
இடியெனக் கதவைத் திறந்து
வந்துவிட்டான் மழைக் கணவன்.

நாணத்தில் கண்மூடி இருந்தவளை
அணைத்துக் கொண்டான் நறுமணத்துடன்
பசியாறிய குழந்தைகள்
ஆடிப்பாடின மகிழ்வுடன்...!

Femila

முன்பனிச் சாரலாய் என நினைவில் வந்து
முட்ட முட்ட முழிக்க வைத்தாய்...!
நீ கிட்ட கிட்ட நெருங்கி வந்தும்
என்னைக் கானல் நீராய் கலங்கவைத்தாய்...!
உன்னை எட்டி எட்டி பிடிக்க முயன்றும்...
எட்டாக் கனியாகவே இருக்கிறாய்...!
குட்டிக் குட்டி என் மனதை அடக்குகிறேன்...
என்னைத் தட்டி தட்டி விட்டு உன் பின்னே
வருகிறது...!

Shaalam



தானே கட்டிக்கொண்ட
கூட்டைத் தானே உடைத்துக்
கொண்டு வந்தால் தான்
சுதந்திரமாக சிறகு விரிக்கும்
வண்ணத்துப் பூச்சி!

Nivetha.J

உன்னோடு கை கோர்த்து நடந்து சென்றே...
பழகிவிட்ட இந்த மனதிற்கு...
இன்றைய தனிமை...
கொடுமை தான்...!

நீ என்னை விட்டுப் பிரிந்து செல்கையில்...
ஓடிச் சென்று உன்னைத் தடுக்கத் துணிந்த
மனதைக் கட்டுப்படுத்தியது...
என்னுடைய கோபமும்,கர்வமும் தான்...!

அந்தச் சாலையோரத்து மரங்களும்...
அந்தச் சிகப்பு ரோஜாச் செடியும் - இன்று
என்னைப் பார்த்து எக்களிப்பாய்
நகைத்துக் கொண்டிருக்கின்றன...
ஏனெனில்...
நீ என் மீது காட்டிய அன்பில்...
என் கோபமும், கர்வமும்...
மடிந்து அழிந்தே போய் விட்டன...!

உன்னால் இழக்கப்பட்ட...
எனது உணர்வுகளுக்கு...
உன்னால் விடை கொடுக்க
முடியுமேயானால்...
அதற்கு தண்டனையாக...
என் காதல் அனைத்தையும்...
என் வாழ்நாள் முழுமைக்கும்...
உனக்காக சமர்ப்பிக்க...
நான் தயாராக இருக்கிறேன்...!
ஒப்பந்தத்தில் கையெழுத்திட
உனக்குச் சம்மதமா...?

Contests & Rewards

September Month Contest Winners

Penmai.com conducts contests each month and awards the winners with attractive prizes. Here is the announcement for the last month contest winners.

1. Top answerers contest winner - Sumitra

3. Neeya Naana Winner - Ammuradhika

2. Penmai Special Contest - Short story contest - Sujibenzic @ Sujana



4. Penmai's Super Star - தமிழ் வித்தகர்! - Saidevo



October Month Contest

Penmai's Special Contest - Navarathri Golu Contest!!!

Neeya Naana - October Month

இந்த மாதத்திற்கான தலைப்பு,
அரசாங்க வேலை - தனியார் வேலை இவை இரண்டில் இன்றைய இளைஞர்களின் தேடல் எதற்காக உள்ளது? ஏன்?

Penmai's super star of the Month.

Penmai Panel will select the best player of Penmai every month, it may be like, **Best Motivator, Best Poet, Best writer, Best Creator, Best Adviser etc. You can play any role like this, the thing you have to do is to give your best.**

For Advertisements Please Contact

support@penmai.com or

call us at **8344 143 220**

Submit your works or questions to
Penmai.com

Write us your feedback to
admin@penmai.com

For advertisement
please contact **8344 143 220**